Registered as a Newspaper

பக்கங்கள் – 16+4

விலை – ரூபா 60

# உதயன்

சுடர் : 39
கதிர் : 238

ஞாயிற்றுக்கிழமை
21 ஜூலை 2024

ஆடி 05 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



" லெக்சனை பின்னுக்கு வைச்சால் நாட்டுக்கு என்ன லாபம் எண்டு உவர் விளங்கப்படுத்தினால் நல்லது கண்டியளோ"

மண்ணித்தலை, கௌதாரிமுனையில் உள்ள

## புராதன இந்து ஆலயங்கள் அடுத்த மாதம் சீரமைப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 21
தொன்மை வாய்ந்த மண்ணித்தலை சிவன் ஆலயம் மற்றும் கௌதாரி முனை பிள்ளையார் ஆலயம் என்பவற்றின் சீரமைப்புப் பணிகள் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
இலங்கை தொல்லியல் திணைக்களத்தால் இந்தப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.
சோழர் காலத்துக்குரியது என நம்பப்படும் மண்ணித்தலை

15

மீனவர்கள் மாயம்

## 500 கடல்மைல் அளவில் நேற்றுத் தீவிர தேடுதல்!

### பதைபதைக்கிறது பருத்தித்துறை

யாழ்ப்பாணம், ஜூலை 21
பருத்தித்துறை துறைமுகத்தில் இருந்து கடற்றொழிலுக்காகச் சென்ற நான்கு மீனவர்களும் ஒருவாரமாகியும் கரைதிரும்பாத நிலையில், நேற்றுத் தீவிரமான தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

15

## பரீட்சைக்குச் செல்ல மறுத்த மகள்: தவறான முடிவெடுத்து தாய் சாவு

யாழ்ப்பாணம், ஜூலை 21
பரீட்சைக்குச் செல்ல மகள் மறுத்தமையால் தாயார் தவறான முடிவெடுத்து உயிரைமாய்த்துள்ளார். இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் - பண்டத்தரிப்பில் இடம்பெற்றுள்ளது.
கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையின் நடனப் பாடத்துக்கான செய்முறைப் பரீட்சை கடந்த 10 ஆம் திகதி இடம்பெற்றது. குறித்த பரீட்சைக்கு மகள்

16

ஜனாதிபதித் தேர்தல்

# தமிழ்ப் பொதுவேட்பாளர் உடன்படிக்கை நாளை!

யாழ்ப்பாணம், ஜூலை 21
ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பிலிருந்து பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கான உடன்படிக்கை தமிழ் சிவில் சமூகத்துக்கும், தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளுக்கும் இடையில் யாழ்ப்பாணத்தில் நாளை திங்கட்கிழமை கைச்சாத்தாகவுள்ளது.

15

ஜனாதிபதித் தேர்தலில்



## 22 ஆவது திருத்தம் தாக்கம் செலுத்தாது

யாழ்ப்பாணம், ஜூலை 21
ஜனாதிபதித் தேர்தல் விடயத்தில் அரசமைப்பின் 22ஆவது திருத்தம் தாக்கம் செலுத்தாது என்று நாடாளுமன்ற உறுப்பினரான எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
"ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்கும் எந்த

16

## பிறமொழிக் கலப்பில்லாமல் தமிழை பாதுகாக்கின்றனர் யாழ். தமிழர்கள்!

பட்டிமன்றம் ராஜா புகழாரம்

விரிவு :- பக். 15

## நிமோனியாவால் சிசு உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 21
நிமோனியாவால் பாதிக்கப்பட்டிருந்த பச்சிளம் குழந்தை நேற்றுக்காலை பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

15



## ஜனாதிபதித் தேர்தலை பிற்போடுவதே உசிதம்!

### விக்னேஸ்வரன் எம்.பி. கூறுகிறார்!

யாழ்ப்பாணம், ஜூலை 21
ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போடுவது முழு நாட்டுக்கும் நன்மை பயக்கும். அதிலும் குறிப்பாகத் தமிழர்களுக்கு நன்மையே எனத் தமிழ்மக்கள் கூட்டணியின் தலை

15

## த.ம. கூட்டணி; தேசிய மாநாடு

யாழ்ப்பாணம், ஜூலை 21
தமிழ்மக்கள் கூட்டணியின் முதலாவது தேசிய மாநாடு யாழ்ப்பாணத்தில் இன்று இடம்பெறவுள்ளது.

14

## என்னுடைய அருமை மாணவனுக்கு தமிழ்த் தேசிய உணர்ச்சி இல்லை

### விக்னேஸ்வரன் எம்.பி. நேற்று விளாசல்

யாழ்ப்பாணம், ஜூலை 21
தமிழரசுக் கட்சியில் இருக்கிற என்னுடைய அருமை மாணவன் பலவிதமான தகைமைகளைக் கொண்டிருந்தாலும், தமிழ்த் தேசிய உணர்ச்சி அவருக்கு இல்லை என்று தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

14

சஞ்சீவி

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறை நெருக்கடி; அரசு பாராமுகம்



## அம்பிகா சற்குணநாதன் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 21

**இலங்கையிலுள்ள சிறைச்சாலைகளில் இயலுமையை மீறி பெரும் எண்ணிக்கையான சிறைக்கைதிகள் அடைக்கப்படுதல் 2018இல் 93 சதவீதமாகக் காணப்பட்ட நிலையில் இந்த வீதம் 2024 இல் 201 சதவீதமாக அதிகரித்துள்ளது.**

-இவ்வாறு சித்திரவதைகளால் பாதிக்கப்பட்டோருக்கான ஐக்கிய நாடுகள் நிதியத்தின் உறுப்பினரும், மனித உரிமைகள் ஆணைக் குழுவின் முன்னாள் ஆணையாளருமான அம்பிகா சற்குணநாதன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

வெலிக்கடை சிறைச்சாலையின் பெண்கள் பிரிவில் அதன் இயலுமையை விடவும் பன்மடங்கானோர் சிறைப்படுத்தப்பட்டுள்ளனர். சிறைக்கைதிகள் ஒருவரது தோளுக்குமேல் உறங்கவேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அந்தப் பிரிவில் உள்ள சிறைக்கைதிகளில் போதைப் பொருள் பாவனையாளர்களும், வயது முதிர்ந்தோரும் உள்ளடங்குகின்றனர். போதைப்பொருள் பாவனையாளர்களை புனர்வாழ்வு நிலையங்களுக்கு மாற்றுவதற்கும், புனர்வாழ்வளிக்கப்பட்டோர் மற்றும் நலிவடைந்த நிலையிலுள்ள முதியோரை விடுவிப்பதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ச-இ)

# ஜனநாயக உரிமையை பாதுகாத்தல் வேண்டும்

## முஜிபுர் எம்.பி. சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜூலை 21

ஜனாதிபதித் தேர்தலை பிற்போடுவதற்கு ரணில் - ராஜபக்ச அரசாங்கம் முன்னெடுக்கும் சூழ்ச்சிக்கு அகப்படாமல் மக்களின் ஜனநாயக உரிமையை பாதுகாக்கவேண்டும்.

-இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதித் தேர்தல் தற்போது சூடு பிடித்துள்ளது. ஜனாதிபதித் தேர்தலை பிற்போடுவதற்கு ரணில் - ராஜபக்ச அரசாங்கம் ஆரம்பத்தில் இருந்து சூழ்ச்சி செய்கிறது. ஜனாதிபதியின் பதவிக் காலம் குறித்து சர்ச்சை ஏற்படுத்துகின்றது.

எனினும் பொருளாதார படுகொலையாளிகள் என்று உயர்நீதிமன்றத்தால் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள ராஜபக்சக்களுக்கு எதிராக இவர் இதுவரை எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை - என்றார். (ச-இ)



# ஜப்பானில் அநுரவுக்கு சிறப்பான வரவேற்பு!

ஜப்பான், ஜூலை 21

ஜப்பானுக்குச் சென்ற, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்கவுக்கு, ஜப்பானில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது.

இன்று ஞாயிற்றுக்கிழமை, ஜப்பானில் நடைபெறவுள்ள இலங்கையர்களின் பொதுக்கூட்டம் மற்றும் வர்த்தகக் கூட்டமொன்றில் பங்கேற்பதற்காக கடந்த வியாழக்கிழமை ஜப்பான் சென்ற தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்கவை விமான நிலையத்தில் வைத்து, அங்கு வசிக்கும் இலங்கையர்கள் உற்சாகமாக வரவேற்றனர். (ப-100)

# கைதானார் அலி சப்ரி

புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் நேற்று சனிக்கிழமை கற்பிட்டி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கற்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குறுஞ்சாம்பிட்டிய பகுதியில் உள்ள அரச சார்பற்ற நிறுவனமொன்றுக்கு சொந்தமான கட்டடமொன்றுக்குள் அத்துமீறி நுழைந்து சொத்துகளை சேதப்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் அலி சப்ரி ரஹீமுக்கு எதிராக வழக்கு தாக்கல்செய்யப்பட்டது. இந்த வழக்கு விசாரணையில் அலி சப்ரி ரஹீம் நீதிமன்றத்தில் முன்னிலையாகாதிருந்தார். இதனையடுத்து உடனடியாக கைதுசெய்து நீதிமன்றில் முற்படுத்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. இந்த நிலையில் அவர் கற்பிட்டி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார் (ச-இ)

# தேர்தலில் களமிறங்கும் சிறிதுங்க ஜயசூரிய



யாழ்ப்பாணம், ஜூலை 21

ஜனாதிபதித் தேர்தலில் தமது கட்சி வேட்பாளராக சிறிதுங்க ஜயசூரியவை களமிறக்குவதற்கு ஐக்கிய சோஷலிஸக் கட்சி தீர்மானித்துள்ளது. ஐக்கிய சோஷலிஸக் கட்சியின் மத்திய குழு கூட்டத்திலேயே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இந்த தகவலை சிறிதுங்க ஜயசூரிய உதயனிடம் உறுதிப்படுத்தினார்.

அதேவேளை, ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுமா? என்ற அச்சம் இன்னும் உள்ளது.

ஜனாதிபதித் தேர்தலை அறிவிக்கும் அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு கிட்டியுள்ள நிலையில், எதற்காக மாத இறுதிவரை காத்திருக்கவேண்டும்?. தேர்தலைப் பிற்போடுவதற்கான அரசியல் சூழ்ச்சிக்கு தேர்தல் ஆணைக்குழுவும் துணை நிற்கின்றதா? என்ற சந்தேகம் எமக்கு எழுந்துள்ளது எனவும் சிறிதுங்க ஜயசூரிய குறிப்பிட்டுள்ளார். (ஒ-25,44)

# தேர்தல் தொடர்பான செய்திகள் உண்மையல்ல!

## ஐரோப்பிய ஒன்றியம் அறிவிப்பு

கொழும்பு , ஜூலை 21

நடைபெறவுள்ள தேர்தல் தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியம் கருத்துக்கணிப்பை மேற்கொண்டுள்ளதாக சமூக ஊடகங்களில் வெளிவந்த செய்திகளில் எதுவித உண்மையுமில்லையென ஐரோப்பிய ஒன்றியத்தின் கொழும்பு அலுவலகம் தெரிவித்துள்ளது.

நடைபெறவுள்ள தேர்தல் தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியம் கருத்துக்கணிப்பை மேற்கொண்டுள்ளதாகவும் ஐரோப்பிய ஒன்றியம் மேற்கொண்ட கருத்துக்கணிப்பின் அடிப்படையில் தேசிய மக்கள் சக்தி வெற்றியீட்டும் எனவும் சமூக ஊடகங்களில் செய்தி பரப்பப்பட்டிருந்தது. இந்தச்செய்தி வெறும் வதந்தி என ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது. (ஒ-22,6)

# இலங்கைக்கு பயணித்த சரக்கு கப்பல் தீ விபத்து

கொழும்பு, ஜூலை 21

இந்தியாவிலிருந்து இலங்கை நோக்கி வந்து கொண்டிருந்த சரக்கு கப்பலில் நேற்றுமுன்தினம் தீவிபத்து இடம்பெற்றுள்ளது.

இந்தக் கப்பல் இந்தியாவின் குஜ ராத்தின் முந்த்ரா துறைமுகத்தில் இருந்து கொழும்பு நோக்கி வந்து கொண்டிருந்த போது கோவாவின் தென்மேற்கேயுள்ள கார்வார் கடற்பகுதியில் தீ விபத்துக்குள்ளாகியுள்ளது.

கப்பலில் பிலிப்பைன்ஸ், மாண்டினெக்ரின் மற்றும் உக்ரைன் நாட்டவர்கள் உட்பட 21 பணியாளர்கள் பயணித்துள்ளனர்.

அதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கப்பலில் தீ மேலும் பாரவாமல் இந்திய கடலோரக் காவற்படை தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளது. (ச-இ)

# சட்டவிரோத கொள்கலன் விடுவிப்பு சுங்க அதிகாரிகள் பணிநிறுத்தம்

ஊழல் மோசடி குற்றச்சாட்டின்கீழ் சுங்கத்திணைக்கள உயரதிகாரிகள் நால்வர் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர். சிரேஷ்ட பிரதிப்பணிப்பாளர், பிரதிப்பணிப்பாளர், சுப்பிரிண்டன், உதவி சுப்பிரிண்டன் ஆகியோரே பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது;-

தனியார் வர்த்தகர் ஒருவரால் இறக்குமதி செய்யப்பட்ட, 25 வகையான வாசனை திரவியங்கள், உதட்டுச்சாயங்கள்,நகப்பூச்சுகள், சருமத்தை வெள்ளையாக்கும் கிறீம் உட்பட பல்வேறு அழகுசாதனப்பொருள்கள் அடங்கிய கொள்கலன் ஒன்று உரிய அனுமதி பெறாத காரணத்தால் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. அந்தக் கொள்கலன் திடீரென விடுக்கப்பட்டுள்ளது. கொள்கலனில் எடுத்துவரப்பட்ட பொருள்களுக்கு தேசிய மருந்து வகைகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் அனுமதி பெறப்படவில்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தையடுத்து, சுங்கத் திணைக்கள சட்டத்தின் கீழும், தாபன விதிக்கோவையின் கீழும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுங்கத்திணைக்கள பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ஒ-25,6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடக்கு - கிழக்கு நட்புறவு

## கிழக்கு ஆளுநருடன் சிறீதரன் எம்.பி. சந்திப்பு

திருகோணமலை, ஜூலை 21

தமிழ்ச் சமூகம் எதிர்கொள்ளும் தற்போதைய பிரச்சினைகள் குறித்து கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவருமான செந்தில் தொண்டமானும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனும் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இந்தச் சந்திப்பு திருகோணமலையிலுள்ள கிழக்கு மாகாண ஆளுநரின் மாளிகையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது பெருந்தோட்டத் தமிழர்களுக்கும் வடக்கு - கிழக்குத் தமிழர்களுக்கும் இடையில் வலுவான நட்புறவை வளர்ப்பதற்கான வழிமுறைகள் தொடர்பில் கலந்துரையாடினர். (ச-40)

# இருநாட்டு மீனவர்களும் ஒருநிலைக்கு வாருங்கள்

இலங்கை கடற்றொழிலாளர் கூட்டமைப்பின் அமைப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 21

**இலங்கை- இந்திய மீனவர்கள் பிரச்சினையில் இருநாட்டு அரசாங்கங்களும் தலையிட்டு ஒரு தீர்வை எட்டப்போவதில்லை. எனவே நாங்கள் ஒன்றுகூடி பேச்சு நடத்தி இரண்டு பகுதி வளங்களைக் காக்க ஒரு நிலைப்பாட்டை எட்ட வேண்டும். - இவ்வாறு அகில இலங்கை தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளர் என்.வி.சுப்பிரமணியம் சுட்டிக்காட்டியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்;

அண்மைக்காலமாக எமது கடலில் இந்திய இழுவைப் படகுகளின் ஆக்கிரமிப்புகள் முன்பு ஒரு காலமும் இல்லாத வகையில் கூடுதலாக உள்ளதை கண்கூடாகப் பார்க்க கூடியதாகவுள்ளது. எமது வளங்களை சூறையாடிச் செல்ல நாங்கள் விடமாட்டோம். எமது உயிரைக் கொடுத்தாவது அந்த வளங்களையும் பாதுகாக்க முயற்சிப்போம். இந்திய மீனவர்களை இலங்கையில் கைது செய்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்தியா இராமேஸ்வரத்தில் மீனவர்கள் திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த விடயத்தில் இந்திய மத்திய அரசம் கவனம் செலுத்தவில்லை. எமது பகுதிக்குள் வந்து தாமும் துன்பத்துக்குள் சிக்கிக் கொண்டு எங்களையும் வாழ விடாமல் துன்பத்துக்குள்ளே தள்ளுகின்றார்கள். எனவே இருநாட்டு அரசாங்கங்களையும் நம்பியிராது அனைவரும் ஒன்றுகூடி ஒரு பேச்சு நடத்தி, இரண்டு பகுதியும் வாழக்கூடியதாக ஒரு நிலைப்பாட்டை எட்டவேண்டும் - என்றார். (ச-27)

## இழப்பீடு வழங்குங்கள் விவசாயிகள் கோரிக்கை

கிளிநொச்சி, ஜூலை 21

கிளிநொச்சி, முரசுமோட்டையில் இந்த வருட சிறுபோகத்துக்கான காணிகள் பகிர்ந்தளிக்கப்படாத மையால் பயிர்ச்செய்கையில் ஈடுபடமுடியாத விவசாயிகள் தமக்கு நட்டஈடு வழங்கவேண்டும் என கிளிநொச்சி மாவட்டச் செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முரசுமோட்டை பகுதியில் சிறுபோகத்துக்கான 65 ஏக்கர் காணி பகிர்ந்தளிக்கப்படாத நிலையிலும் 120 ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் மேலதிக விதைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது நாங்கள் சிறுபோகத்தை இழந்திருப்பதனால் காலபோகத்துக்கான விதை நெல் நெருக்கடி ஏற்பட்டுள்ளதுடன், எமது வாழ்வாதாரமும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் சிறுபோகத்துக்கான இழப்பீட்டையும், காலபோகத்துக்கான விதை நெல்லையும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என விவசாயிகள் மாவட்டச் செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (25-13)



வாக்குறுதிகளை நிறைவேற்று

## கையெழுத்து சேகரிப்பு யாழிலிருந்து ஆரம்பம்

மக்களுக்கு வாக்குறுதிகளை அள்ளி வழங்கித் தேர்தலில் வாக்குகளைப் பெற்றுக்கொண்டு நாடாளுமன்றம் சென்றோர் வாக்குறுதிகளை நிறைவேற்றவேண்டும் எனக் கோரி, யாழ். நகரில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கையெழுத்து வேட்டை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் பிரதான பேருந்து நிலையத்துக்கு முன்பாகவும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் கையெழுத்துகள் பெறப்பட்டன. தேர்தல் காலங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்களால் முன்வைக்கப்படும் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான சட்டவரைவு ஒன்று நாடாளுமன்றத்தில் இயற்றப்படவேண்டும் என்றும் வலியுறுத்தி முன்னெடுக்கப்படும் இந்தக் கையெழுத்து வேட்டை தொடர்ந்து 17 மாவட்டங்களில் இடம்பெறவுள்ளது. (ச-20,66)

## வவு.வில் விபசாரம் 4 பெண்கள் கைது

வவுனியா, ஜூலை 21

தேக்கவத்தைப் பகுதியில் விடுதி ஒன்றில் பொலிஸார் மேற்கொண்ட விசேட சோதனையின் போது விபசாரத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 4 பெண்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். வவுனியா, தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில் விசேட கண்காணிப்பு நடவடிக்கை நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது. கைதுசெய்யப்பட்டவர்கள் வவுனியா மற்றும் காலி ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-18)



## பசுவை இறைச்சியாக்கிய சந்தேகநபர் கைதானார்

யாழ்ப்பாணம், ஜூலை 21

ஊர்காவற்றுறை, மெலிஞ்சிமுனையில் பசுமாடொன்றை இறைச்சிக்காக வெட்டிய குடும்பஸ்தர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அத்துடன் வெட்டுவதற்காக தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த காளை மாடொன்றும் மீட்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை சுகாதார மருத்துவ அதிகாரி தலைமையிலான குழுவினர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையிலேயே சந்தேகநபர் கைதானார்.

குறித்த நபருக்கு எதிராக வழக்கு பதிவுசெய்யப்பட்டதுடன் அவர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அதேவேளை, ஊர்காவற்றுறை உட்பட தீவகத்தின் பல இடங்களிலும் அனுமதியற்ற முறையில் மாடுகள் இறைச்சிக்காக வெட்டப்படுதல் மற்றும் மாடுகள் கடத்தப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இந்தப் பாதகச் செயல்களை தடுத்துநிறுத்துமாறும் பொதுமக்கள் தரப்பில் கோரிக்கை முன்வைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-20)

## தொழில் முயற்சியாளர்களை உருவாக்குவது எமது நோக்கம்



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

ஒரு நாட்டின் அபிவிருத்தி என்பது அந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டமைகிறது. விவசாயம், தொழில் நடவடிக்கைகள் மற்றும் சேவைகளே நாட்டின் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் காரணிகளாகும். ஒரு நாடானது தனக்கென உற்பத்திச் சுழற்சியைக் கொண்டுள்ளது. குறிப்பிட்ட காலகட்டத்தில் ஆடைத் தொழிற்சாலைகளை அடிப்படையாகக் கொண்டு இது முன்னெடுக்கப்பட்டிருந்ததாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடு உருவாக, பொருளாதார வளர்ச்சி பல அம்சங்களில் முன்னெடுக்கப்படவேண்டும். சேவைகள், சுற்றுலா, விவசாயம், உற்பத்தி போன்ற பல பொருளாதார நடவடிக்கைகள் பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுத்து வருகிறன.

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களே அதிக பங்களிப்பை வழங்கி வருவது இப்போது புதிய போக்காக அமைந்து காணப்படுகிறது. பல்வேறு வேலைவாய்ப்புகளை வழங்கிக்கொண்டு, இவர்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 50% வீதத்துக்கும் அதிகமான பங்களிப்பை நல்கி வருகின்றனர். எனவே இதனைக் கருத்திற்கொண்டு, ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் ஒரு மில்லியன் புதிய தொழில்முயற்சியாண்மைகளையும் தொழில்முனைவோரையும் உருவாக்குவோம். மூலதனத்தை வழங்கி, சலுகைகளை வழங்கி, தற்போதுள்ள தொழில்முயற்சியாண்மைகளைப் பாதுகாத்துக் கொண்டு, மேலும் பல புதிய தொழில்களை உருவாக்க நடவடிக்கை எடுப்பேன். சகல பிரதேச செயலகத்திலும் தகவல் தொழில்நுட்ப பூங்காக்களை உருவாக்குவேன். தகவல் தொழில்நுட்பக் கல்வி கட்டாய பாடமாக மாற்றப்படும் - என்றார். (ப)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பன்றிக்கேணி

# கந்தசுவாமிக்கு இன்று தேர்!

யாழ். ஜூலை 21
மீசாலை அருள்மிகு பன்றிக்கேணி கந்த சுவாமி ஆலயத்தின் வருடாந்தத் தேர்த்திரு விழா இன்று மு.ப. 10 மணிக்கு இடம்பெறவுள் ளது. தீர்த்தோற்சவம் நாளை மு.ப. 10 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ம-131)



# ஆடிப்பிறப்பு விழாவும் கலைஞர் கலாசார நிகழ்வும்

சாவகச்சேரி, ஜூலை 21
சாவகச்சேரி பிரதேசசபையின் ஆடிப்பிறப்பு விழா வும் கலைஞர் கலாசார நிகழ்வும், கொடிகாமம் நட்சத்திரமஹால் மண்டபத்தில் கடந்த வியாழக் கிழமை நடைபெற்றன.
பிரதேசசபை செயலர் க.சந்திரகுமார் தலை மையில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை விருந் தினராக வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக் களப் பணிப்பாளர் திருமதி லாகினி நிருபராஜ், தென்மராட்சி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப் பாளர் இ.சர்வேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண் டனர். (ப-9)



மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தால், பச்சிலைப்பள்ளி பிரதேச மற்றும் கிராமமட்ட மாற்றுத் திறனாளி சங்கத்தினருக்கு, போதைப் பொருள்கள் பாவனையால் ஏற்படும் தீங்குகள், அவற்றைப் பாவிப்பதைத் தடுத்தல் மற்றும் சட்ட நடவடிக்கைகள் தொடர்பான விழிப்புணர்வு பிரதேச செயலக மண் டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. பிரதேச செயலர் இ.த. ஜெயசீலன் தலைமையில் நடை பெற்ற நிகழ்வில் சமூக சேவை உத்தியோகத்தர் வளவாளராகக் கலந்துகொண்டார். (ப-9)



யாழ்.மானிப்பாய் இந்துக் கல்லூரியில் தரம் -7 இல் கல்வி கற்கும் மாணவன் அஜித் ஹரீஸ் தனது பிறந்த நாளை முன்னிட்டு, கல்லூரியின் உதை பந்தாட்ட அணிக்கும், சித்திரப் பிரிவுக்கும் ஒரு தொகுதி உபகரணங்களை கடந்த புதன்கிழமை கையளித்தார். (ப-66)



யாழ். நவாலிதெற்கு அ.மி.த.க. பாடசாலையில் சிறுவர் துஷ்பிரயோகம், சுகாதாரம் மற்றும் உண வுப் பழக்கம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு, பாடசாலை மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.
பாடசாலை அதிபரால் ஒழுங்கமைக்கப்பட்ட நிகழ் வில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக சிறுவர் பெண் கள் பிரிவு உத்தியோகத்தர்கள், கிராம மட்ட உத்தி யோகத்தர்கள் மற்றும் சுகாதாரப் பிரிவு உத்தியோ கத்தர்கள், பெற்றோர் எனப் பலரும் கலந்துகொண் டனர். (ப-66)



பளை, தம்பகாமம் கலை மகள் முன்பள்ளி மழலை களின் 'செயற்பட்டு மகிழ் வோம்' நிகழ்வு, முன்பள்ளி மைதானத்தில் கடந்த வியா ழக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தி னராக பச்சிலைப்பள்ளி பிர தேச செயலர் இ.த.ஜெயசீ லன், சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி வடக்கு வலயக் கல்வி அலுவலகத்தின் ஆரம்ப முன்பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவின் உத விக் கல்விப்பணிப்பாளர் பொ.விஜயநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ப-9)



வட்டுக்கோட்டை, தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் மஹோற்சவத்தில் சப்பரம், தேர், தீர்த்தம் என்பன அடியவர்கள் சூழ சிறப்புற இடம்பெற்றன. (ச)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




ஓமானில் கப்பல் விபத்து

# வடமராட்சியைச் சேர்ந்தோரே கப்பலின் இயக்குநர்கள்!

ஓமன் கடலில் பயணித்த எரிபொருள்கப்பல் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ள நிலையில் குறித்த கப்பலின் கப்டனாக செயற்பட்டவர் உள்ளிட்ட மூவர் யாழ்ப்பாணம் வடமராட்சியை சேர்ந்தவர்கள் என்று தகவல் வெளியாகியுள்ளது.

இலங்கையர்கள் மூவர் உள்ளிட்ட 16 பணியாளர்களுடன் பயணித்த எரிபொருள் கப்பலொன்று ஓமான் கடலில்கடந்த 15 ஆம் திகதி விபத்துக்குள்ளாகியிருந்தது. குறித்த கப்பலில் இருந்த பணியாளர்கள் 16 பேரும் காணாமற் போயிருந்தனர். அவர்களில் இலங்கைத் தமிழர் ஒருவர் உள்ளிட்ட 9 பேரை இந்தியக் கடற்படையினர் மீட்டனர்.

இவ்வாறு மீட்கப்பட்டவர்களில் ஒருவரான இலங்கைத் தமிழர், குறித்த கப்பலின் இரண்டாவது அதிகாரியாகக் கடமையாற்றியவர் என்றும் அவர் ஊரிக்காடு, தொண்டைமானாறை சேர்ந்தவர் எனவும் ஏனைய இரு இலங்கையர்களும் வடமராட்சி வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரியவந்துள்ளது. மற்றைய இருவரில் வல்வெட்டித்துறையை சேர்ந்த க.வைத்தியகுமார் கப்பலின் கப்டனாகவும் காட்டுவளவு, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த த. அப்பாச்சாமி கப்பலின் பிரதான பொறியியலாளராகவும் செயற்பட்டுள்ளனர். இந்த இருவர் தொடர்பில் இதுவரை எவ்வித தகவல்களும் வெளியாகவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-100)




கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட இளைஞர், யுவதிகளுக்கான தொழில் வாய்ப்பினைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் பிரதேச தொழிற்சந்தை நிகழ்வு, மேற்படி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் சண்முகராஜா சிவஸ்ரீ தலைமையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி இடம்பெற்றது. நிகழ்வில் இருபதுக்கும் மேற்பட்ட தொழில் நிறுவனங்களும், திறந்த பல்கலைக்கழகம், சமுத்திரவியல் பல்கலைக்கழகம், தொழில்நுட்பக்கல்லூரி, தொழிற்பயிற்சி அதிகாரசபை போன்ற உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி வழங்கும் நிறுவனங்களும் கலந்துகொண்டன. (ப-66)

# பாகிஸ்தானியர்கள் விடுவிக்கப்படுவர்

## தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 21

போதைப்பொருள்கடத்தல் குற்றச்சாட்டின் கீழ் கைதுசெய்யப்பட்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்த பாகிஸ்தானியர்கள், ஒருவார காலத்தினுள் விடுவிக்கப்படுவார்கள் எனப் பாகிஸ்தானுக்கான இலங்கைத் தூதுவர் ஓய்வுபெற்ற கடற்படைத்தளபதி ரவீந்திர சந்திரசிறி விஜேதுங்க தெரிவித்துள்ளார்.

இஸ்லாமாபாத்தில் பாகிஸ்தானிய உள்துறை மற்றும் போதைப்பொருள் தடுப்பு அமைச்சர் மொஹ்ஷின் நக்வியுடன் இடம்பெற்ற சந்திப்பின்போதே ரவி சந்திரசிறி விஜேதுங்க இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். இவர்களை விடுவிப்பதற்குரிய சகல ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

2020 ஆம் ஆண்டு ஒன்பது பேரும் 2022 ஆம் ஆண்டு ஒருவருமாக பத்து பாகிஸ்தானியர்கள் கடல் மார்க்கமாக இலங்கைக்குள் பெருமளவு ஐஸ், ஹெரோய்ன், கெற்றமைன் உட்பட பிற போதைவஸ்துகளைக் கடத்தி வந்தபோது, இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டிருந்தனர். கொழும்பு மேல்நீதிமன்றம் இவர்களுக்கு ஆயுள் தண்டனை தீர்ப்பளித்திருந்தது. இவ்வாறு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட பாகிஸ்தானியர்களே விடுவிக்கப்படவுள்ளனர். (ப-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காண்பியக்கலைப் பீடத்தின் முதலாவது ஆய்வு மாநாடு



**யாழ்ப்பாணம், ஜுலை 21**

**பல்கலைக்கு முன்னர் தோன்றிய வரலாற்றைக் கொண்ட சேர்.பொன்னம்பலம் இராமநாதன் ஆற்றுகை மற்றும் காண்பியக்கலைகள் பீடத்தின் முதலாவது ஆய்வு மாநாடு, எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளதாக பீடாதிபதி எஸ்.சிவரூபன் தெரிவித்தார்.**

பீடத்தில் ஊடக சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

2023 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் எமது பீடம் யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடத்தில் தனியே உருவாக்கம் பெற்றது. இதனைத் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் முதல் முயற்சியாக இந்த ஆய்வு மாநாட்டைக் கருத்திற்கொள்கின்றோம். இந்த பீடம் யாழ்.பல்கலைக்கழகத்தை விட வயது கூடியது என்றே சொல்லலாம். 1960 ஆம் ஆண்டளவில் விஜயதசமி நாள் ஒன்றில் அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் துணைவேந்தராக இருந்த ரி.என்.நாராயணசாமி பிள்ளை என்பவரால் இசை மற்றும் நடனத்துறையை உள்ளடக்கி இங்கே இந்த வளாகம் ஆரம்பமானது.

பிற்காலத்தில் ஓவியக்கலைகள் உட்பட்ட பல துறைகள், பிற்பட்ட காலத்தில் இணைக்கப்பட்டன. 1993 ஆம் ஆண்டுவரை டிப்ளோமா பாடநெறிகள் முன்னெடுக்கப்பட்டன.

தொடர்ந்து 1993 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பட்டப்படிப்பு இங்கே ஆரம்பமானது. 2023 இல் யாழ்.பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்திலிருந்து தனியொரு பீடமாக மாறுகின்றபோது நாடகமும் அரங்கியலும் இங்கே இணைக்கப்பட்டது.

மேலும் இசை, ஓவியம், பரத நாட்டியம், சிற்பத்துறை உட்பட ஆறு துறைகள் தனியாக உருவாக்கப்பட்டன.

இடர்பாடுகள் இருந்தபோதிலும் இந்த ஆய்வு மாநாடு திட்டமிட்டபடி நடத்தி முடிக்கப்படும் என்றார். (ப-125)

## வீதி பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம், ஜுலை 21

2323/61 ஆம் இலக்க, 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18 ஆம் திகதிய இலங்கை ஜனநாயக சோஷலிஸ குடியரசு அதிவிசேட வர்த்தமானி பிரசுரத்திலுள்ள வலிகாமம் மேற்குப் பிரதேச சபைக்குச் சொந்தமான, ஜே/165 கிராமசேவகர் பிரிவில் அமைந்துள்ள (தற்போதைய பெயர் 2ம் குறுக்கு ஒழுங்கை, வட்டுக்கோட்டை உப அலுவலகம், வீதி தொடர் இலக்கம் 143, வீதியின் நீளம் 500 மீற்றர், வீதியின் ஆரம்பம் மாவடி மூளாய் வீதி, வீதியின் முடிவு வட்டுக்கோட்டைச் சந்தை வீதி) இவ்வீதியை 'நேவி அங்கிள் கலைக் விஸ்வநாதன் வீதி' என்று பெயர் மாற்றம் செய்யுமாறு அப்பகுதி மக்கள் மற்றும் பொது அமைப்புகள் மேற்படி சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (ப)

## நாட்டின் சட்டவரைவுகள் மாணவருக்கு அறிவூட்டல்

யாழ்ப்பாணம், ஜுலை 21

பொருளாதார பரிமாற்றல் சட்டவரைவு மற்றும் அரச நிதி முகாமைத்துவ சட்டவரைவு ஆகியவை குறித்து பாடசாலை மாணவர்களுக்குத் தெளிவூட்டும் ஜனாதிபதியின் வேலைத்திட்டம் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதில் வடக்கு மாகாணத்திலுள்ள பாடசாலைகளைச் சேர்ந்த உயர்தரத்தில் கணித, விஞ்ஞான, வணிக மற்றும் கலைத்துறைகளில் கல்விபயிலும் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

குறித்த சட்டவரைவினூடாக 2048ஆம் ஆண்டில் மாணவர்கள் மத்தியில் சட்டவரைவு தொடர்பான அறிவினை மேம்படுத்தும் வகையில் கருத்துகள் பரிமாறப்பட்டன. நிகழ்வில் நிதி அமைச்சின் அபிவிருத்தி நிதித்திணைக்களத்தின் பணிப்பாளர் வளர்மதி கங்காதரன் உள்ளிட்ட குழுவினர் வருகைதந்து கருத்துகளை வழங்கினர். (ச-26)

# கடலட்டைப் பண்ணைக்கு அனுமதிகோரும் மீனவர்கள்

யாழ்ப்பாணம், ஜுலை 21

கடலட்டைப் பண்ணைகளை அமைக்க அனுமதிகளை தந்து எமது வாழ்வாதாரத்தை மேம்படுத்த துறைசார் அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஊர்காவற்றுறை - மெலிஞ்சிமுனை கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மூன்று குடும்பங்களுக்கு ஓர் அட்டைப் பண்ணை தாருங்கள் என விண்ணப்பித்தோம். அதற்கான அனுமதிகளை துறைசார்ந்த அதிகாரிகள் பெற்றுதர நடவடிக்கை எடுத்துள்ளார்கள். இந்நிலையில் எமக்கு கடலட்டைப் பண்ணைகளை அமைக்க அனுமதி கொடுக்கக்கூடாது என சிலர் தடைகளை ஏற்படுத்தி வருகின்றனர். இதனால் மீன் வளத்துக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது. யாருடைய தொழிலுக்கும் பாதிப்பு ஏற்படுத்தாது. எங்களுக்கு கடல் வளத்திலும் சுற்றுச்சூழலிலும் அக்கறை உண்டு என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். (ஐ-20)

## பௌர்ணமி தீப பூசையும் சுமங்கலிப் பூசையும்

யாழ்ப்பாணம், ஜுலை 21

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோவில் ஆடிமாத பௌர்ணமி தீப பூசையும், சுமங்கலிப் பூசையும் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் விநாயகப் பெருமானுக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகிச் சிறப்பாக இடம்பெறவுள்ளது. இன்று இரவு 7 மணியளவில் தீப பூசையும், சுமங்கலிப் பூசையும் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து சுவாமி திருவீதி உலா வரும் காட்சியும் நடைபெறும். (ச-66)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். நீண்டநாள் விருப்பத்தை நிறைவேற்றி மகிழ்வீர்கள். தன்னம்பிக்கை அதிகரிப்பதுடன் உற்சாகமும் பெருக்கெடுக்கும். எதிர்காலம் பற்றிய சிந்தனை மேலோங்கும். பிணக்குகள் நீங்கும்.

**இடபம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். சிலருக்கு மனதில் இனம் தெரியாத சோர்வு உண்டாகலாம். உடல் நலனில் கவனம் தேவை. வீண் செலவுகள் ஏற்படும்.

**மிதுனம்:** அதிர்ஷ்டகரமான நாள். எடுக்கும் புதிய முயற்சி வெற்றிகரமாக முடியும். காரியம் அனுகூலமாக முடியும். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. காரியம் அனுகூலமாக முடியும். விற்பனையும் இலாபமும் அதிகரிக்கும்.

**கடகம்:** ஆதாயம் கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். பிரச்சினைகள் ஏற்படும். விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டாகும். ஆதாயம் தருவதாக இருக்கும்.

**சிம்மம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்படலாம். எதிரிகள் வகையில் எச்சரிக்கையாக இருக்கவும். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். மற்றவர்களிடம் வீண் விவாதத்தில் ஈடுபடவேண்டாம்.

**கன்னி:** எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். மனஸ்தாபம் ஏற்படக்கூடும். ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. சுபநிகழ்ச்சி ஒன்றுக்கான பேச்சு சுமுகமாக முடியும். செலவுக ளால் கையிருப்பு கரையும்.

**துலாம்:** உற்சாகமான நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். முக்கியமான முடிவுகள் எதையும் இன்று எடுக்க வேண்டாம்.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர் செலவுகளும் ஏற்படும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மா மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்க வாய்ப்பு உள்ளது. எதிரிகள் பணிந்து போவார்கள். தடைகள் உண்டாகும்.

**தனுசு:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். சகோதர வகையில் எதிர்பார்க்கும் காரியம் முடிவதில் தாமதம் உண்டாகும். பிரச்சினைகள் ஏற்படும். அலைச்சலும் தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும்.

**மகரம்:** புதிய முயற்சிகளை தொடங்குவது சாதகமாக முடியும். உடல்நலனில் கவனம் தேவை. ஆரோக்கியக்குறைவு ஏற்பட்டு சரியாகும். உறவினர்களுடன் பேசும்போது வீண் மனவருத்தம் ஏற்படக்கூடும்.

**கும்பம்:** குடும்பத்தில் இருந்த கருத்து வேற்றுமை நீங்கும். அன்பும் அந்நியோன்யமும் அதிகரிக்கும். தன்னம்பிக்கை மற்றும் தைரியத்துடன் செயற்படுவீர்கள். காரியங்களில் வெற்றி உண்டாகும்.

**மீனம்:** பொறுமையுடன் இருக்கவேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும். முடிவுகள் எடுப்பதில் அவசரம் வேண்டாம். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பேசப்படுமா புதைகுழி?

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள் நிறைவுக்கு வந்து, புதைகுழி மூடப்பட்டிருக்கின்றது. 50க்கும் மேற்பட்ட மனித எச்சங்கள், விடுதலைப் புலிகளுடையதாக இருக்கலாம் என்று கருதப்படும் பச்சை நிற உடைகள், சயனைட் குப்பிகள், த.வி.பு. என்று அடையாளமிடப்பட்ட இலக்கத்தகடுகள், துப்பாக்கிச் சன்னங்கள், போர் எச்சங்கள் என ஏதோவொரு சம்பவத்தின் சாட்சியத்தை வலுவாகவே அந்தப் புதைகுழி பதிவுசெய்திருக்கின்றது. புதைகுழிகள் இலங்கைக்குப் புதியன அல்ல. அவற்றின்பால் ஏற்பட்ட பட்டனுபவத்தால், கொக்குத்தொடுவாயில் மனிதப் புதைகுழியொன்று உள்ளதாக 2023 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதன்முதல் வெளிப்படுத்தப்பட்டபோது தமிழர் தாயகத்திலிருந்து பெரும் கவனக்குவிவு இந்தவிடயத்தில் செலுத்தப்படவே செய்தது. எனினும், நாம் அனைவரும் சந்தேகப்பட்டதைவிடவும், நிபுணர்கள் எதிர்வுகூறியதைவிடவும் பல மடங்கு பெரிதானதாகவும் ஏராளம் தடயங்கள் மற்றும் எச்சங்களைக் கொண்டதாகவுமே புதைகுழி அமைந்திருந்தது.

ஆனால், இறுதிப்போர் தொடர்பான விடயங்கள் எப்போதெல்லாம் வெளிச்சத்துக்கு வருகின்றனவோ - எப்போதெல்லாம் இவ்வாறான விடயங்கள் பேசுபொருள் ஆகின்றனவோ, அப்போதெல்லாம் ஒருவித மெத்தனப்போக்கையே அரசாங்கம் கைக்கொண்டது. அதன் தொடர்ச்சியாகவே கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி விவகாரத்திலும் அரசாங்கம் நடந்துகொள்ள எத்தனித்தது. அதைத்தாண்டியும் மூன்று கட்டங்களாக இந்தப் புதைகுழியில் அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்றால், அதற்குத் தமிழர் தாயகத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்ட அழுத்தமும் பிரதான காரணம் என்பதை அவ்வளவு இலகுவில் மறுத்துவிடமுடியாது. ஆனால், இதற்கு முன்னரும் எத்தனையோ மனிதப்புதைகுழிகள் தாயகத்திலும் தாயகத்துக்கு வெளியிலும் அவதானிக்கப்பட்டிருக்கின்றன. இருப்பினும் அந்த மனிதப் புதைகுழிகள் அதிகாரக் கதிரைகளின் அழுத்தத்தால் மூடி மறைக்கப்பட்டனவே அன்றி நீதியானதும் நியாயமானதுமான விசாரணைகளையும் தீர்ப்புகளையும் எதிர்கொள்ளவேயில்லை. இவ்வாறானதொரு பின்னணியில் கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி விவகாரத்திலும் அவ்வாறான மழுங்கடித்தல்கள் இடம்பெற்றுவிடாது தடுப்பதற்காக நாம் அனைவரும் ஓரணியிலும் மிகமிக அவதானமாகவும் இருக்கவேண்டிய காலமிது. கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் மட்டுமல்ல, ஒட்டுமொத்த மனிதப் புதைகுழி விவகாரங்களிலும் சர்வதேசம் தலையிடுவதற்கான ஓர் ஆரம்பப் புள்ளியாகவும் இந்த விவகாரத்தை நாம் மாற்றிக்கொள்ளமுடியும். அதற்குரிய இயலுமை கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழிக்கு இருக்கவே செய்கின்றது.

கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழியின் மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிகள் இடம்பெற்ற 10 நாள்களில் 6 நாள்கள் ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதி பணிகளை நேரடியாகக் கண்காணித்தார். அமெரிக்கத் தூதரக அதிகாரிகளும், 'காணாமலாக்கப்பட்டவர்களின் குரல்களுக்காக தாமும் அகழ்வுகளைக் கண்காணிக்கின்றோம்' என்று தெரிவித்து அகழ்வுப் பணிகளில் கலந்துகொண்டிருந்தனர். இவை, இந்த விடயத்தில் சர்வதேசம் கொண்டுள்ள ஈடுபாட்டை வெளிப்படுத்தும் நிலையில், கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விவகாரத்தை மிகமிகத் தீவிரமானதாகவும், பாரதூரமானதாகவும் நாடாளுமன்றத்திலும் வெளியிலும் பேசுபொருளாக்க வேண்டியது தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களுடையதும், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களினதும் பிரதான கடமையாகும். உண்மைகளை வெளிக்கொண்டுவரும் மெய்யான அகழ்வுப் பணிகளை ஆரம்பிக்கப்போகின்றோமா? அல்லது புதைகுழி புதைந்தேதான் போகப்போகின்றதா? என்பதை நாமும் நம் தலைவர்களுந்தான் தீர்மானிக்கவேண்டும்.




# அரசமைப்புத் திருத்தம் அச்சம் தேவையில்லை

## ஜனாதிபதி தெரிவிப்பு



**கொழும்பு, ஜூலை 21**

**சர்வஜன வாக்கெடுப்புக்கான அதிகாரத்தைப் பெற்றுக்கொண்டதிலிருந்து ஜனநாயகத்தை பேணி வந்த நாடு என்ற வகையில் இலங்கை தொடர்ந்தும் அதற்காக அர்ப்பணிக்கும். அரசமைப்புத் திருத்தம் குறித்து எவ்விதத்திலும் அச்சம் கொள்ளவேண்டாம்.**

-இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, காலி பெலிகஹ பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட புதிய நீதிமன்றக் கட்டடத்தொகுதியை திறந்து வைக்கும் நிகழ்வில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

அரசமைப்புத் திருத்தம் தொடர்பிலான பணிகள் துறைசார் அனுபவம்மிக்கவர்களிடமே கையளிக்கப்படும். 2015 ஆம் ஆண்டில் அரசமைப்பு மறுசீரமைப்பு செய்யப்பட்ட வேளையில் சொக்ஸி இறைபதம் அடைந்திருந்த காரணத்தால் அந்த பணிகளை சட்டத்தரணி ஜயம்பதி விக்ரமரத்னவிடம் கையளிக்க வேண்டியிருந்தது.

அந்த நேரத்தில் அவரின் தவறு காரணமாகவே தற்போது சிக்கலான நிலைமை உருவாகியிருக்கிறது. அதனையிட்டு நாட்டு மக்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன். இது குறித்து பயப்பட வேண்டாம். நமது நாடு 1931 முதல் ஜனநாயகத்தைப் பாதுகாத்து வருகிறது- என்றார். (ச-இ)

# இள வயதினரிடையே எய்ட்ஸ் பரவல் உயர்வு

இலங்கையில் கடந்த ஆண்டு, எச்.ஐ.வி. எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளது. இந்த நோயால் பாதிக்கப்பட்ட 40 குழந்தைகள் இனங்காணப்பட்டுள்ளனர் என்று தேசிய பாலியல் நோய் மற்றும் எய்ட்ஸ் ஒழிப்புத் திட்டம் தெரிவித்துள்ளது. கடந்த ஆண்டில் 15 முதல் 24 வயதுக்குட்பட்ட பதின்ம வயதினரிடையே எய்ட்ஸ் பரவுவது அதிகரித்துள்ளது. இந்த நோயால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 169 ஆக பதிவாகியுள்ளது. அத்துடன் எச்.ஐ.வி.யால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 2022இல் 607 ஆகவும், 2023இல் 694 ஆகவும் பதிவாகியுள்ளது. அதன்படி கடந்த ஆண்டில் 14 சதவீதம் அதிகமாகும். அதேவேளை 15 முதல் 24 வயதுக்குட்பட்ட பதின்ம வயதினரிடையே எய்ட்ஸ் பரவுவது அதிகரித்து வருவதாகவும் விசேட மருத்துவ நிபுணர் வினோ தர்மகுலசிங்க தெரிவித்துள்ளார். (ச-இ)

# சிறுவர்களிடையே நீரிழிவு உயர்வு

கடந்த 10 வருடங்களில் கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் சிறு குழந்தைகளிடையே நீரிழிவு நோயின் தாக்கம் அதிகரித்துள்ளது என்று கொழும்பு தேசிய மருத்துவமனையின் நீரிழிவு தொடர்பான விசேட மருத்துவ நிபுணர் உதித புளுகஹபிட்டிய தெரிவித்துள்ளார். நகர்ப்புறங்களில் வாழும் மக்களில் 20 வீதமானவர்கள் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். குடும்பத்தில் ஒருவருக்கு கழுத்துப் பகுதி கருப்பாக மாறியிருந்தால், முகத்தில் முடி வளர்வது போன்ற நிலைமைகள் இருந்தால், அதுபோன்ற சமயங்களில் நீரிழிவு நோய் உள்ளதா எனப் பரிசோதிக்க வேண்டியது அவசியம் . நீரிழிவு நோயில் இருந்து விடுபட ஒரு மணி நேரம் அல்லது அரை மணி நேரம் உடற்பயிற்சி செய்வது அவசியம் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# தேர்தலில் குதிக்கவுள்ள சமசமாஜக் கட்சி

கொழம்பு, ஜூலை 21

பேராசிரியர் திஸ்ஸ விதாரன தலைமையிலான லங்கா சமசமாஜக் கட்சி ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ளது.

இடதுசாரி சக்திகளை ஒன்றிணைக்கவும், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிக்கவுமே லங்கா சமசமாஜக் கட்சி ஜனாதிபதித் தேர்தலைப் பயன்படுத்தும் என அந்தக்கட்சியின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (ஒ-25,44)

## மின்கட்டணக் குறைப்பு

# 18 இலட்சம் பேர் நன்மையடைவு

கடந்த வாரம் நடைமுறைக்கு வந்த மின் கட்டண மறுசீரமைப்புக்கு அமைய 18 இலட்சத்துக்கும் மேற்பட்ட மின் பாவனையாளர்களுக்கு நன்மை கிட்டியுள்ளது என்று மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. இதுமொத்த உள்நாட்டு மின் பாவனையாளர்களின் எண்ணிக்கையில் 39 சதவீதம் என்றும் குறிப்பிடப்படுகின்றது. (ச-இ)

## நாளை

22.07.2024

திங்கட்கிழமை - ஆடி - 06

சுபநேரம் : 12.01 - 01.31

ராகுகாலம் : 07.31 - 09.01

## நாளொரு நல்வார்த்தை

**சிறிய தவறுகளைத் திருத்திக் கொள்ளாவிட்டால் பெரிய தவறுகளைத் தவிர்க்கமுடியாது.**

*- கன்பூசியஸ்-*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு முன்னுரிமைப்படுத்தி செயற்படுக

### தேசிய மக்கள் சக்திக்கு புத்திஜீவிகள் குழு கடிதம்

கொழும்பு, ஜூலை 21

மூவின புத்திஜீவிகளும் இணைந்து, நாட்டின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு முன்னுரிமை அளித்து செயற்படுமாறு தேசிய மக்கள் சக்திக்குக் கடிதம் எழுதியுள்ளனர்.

தற்போது நடைமுறையிலுள்ள 21ஆவது அரசமைப்பு திருத்தத்தை வரைந்த பேராசிரியர் ஜெயதேவா உயங்கொட இந்தக் கடிதத்தில் முதலாவதாக ஒப்பமிட்டுள்ளார்.

வரப்போகும் தேர்தல்களில் சமுதாயத்தில் கூர்மையடைந்துள்ள இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாண்பதில் உங்களது கவனத்தைத் செலுத்துமாறு தாழ்மையாகக் கேட்டுக்கொள்கிறோம். பொது எதிரியான இனவாதத்துக்கு எதிரான அனைத்து இடதுசாரிகள், முற்போக்குச் சிந்தனையாளர்கள் அனைவரையும் ஒன்று திரட்டுங்கள். அனைத்து இன மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தீர்வுத்திட்டத்தை தயாரியுங்கள்.

ஆரம்பம் முதல் இன்றுவரை பொது எதிரிக்கு எதிரான சக்திகளை ஒன்றுதிரட்ட இடது சாரிகளும் முற்போக்குச் சிந்தனையாளர்களும் தவறிவிட்டனர். 1947ஆம் ஆண்டு தேர்தலில் இடதுசாரிகள் ஒன்றுபட்டு செயற்பட்டிருந்தால் ஆட்சியைக் கைப்பற்றியிருக்கமுடியும். மலையக மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டிருக்கமாட்டாது. 1947ஆம் ஆண்டு தேர்தலில் லங்கா சமசமாஜக்கட்சி இழைத்த தவறை 2024ஆம் ஆண்டுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி இழைக்கக்கூடாது.

தேசிய மக்கள் சக்தி அனைத்து இன மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அதேநேரத்தில் எக்காரணம் கொண்டும் வழமையான, பொது எதிரியான இனவாதத்துக்கு இடமில்லாத வகையில் வடக்கு மக்களின் நம்பிக்கையைப் பெற்றதாக நடைமுறைச் சாத்தியமானதாக ஒருதிட்ட வரைவை தயாரிக்க வேண்டும். சர்ச்சைக்குரிய விடயங்கள் ஜனநாயக முறையில் தீர்மானிக்கப்படவேண்டும். இறுதித்தீர்மானம் பொது வாக்கெடுப்பினூடாக மேற்கொள்ளப்படலாம். இந்த விடயங்கள் தொடர்பாக குழுநிலை கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படலாம். இந்த விடயங்கள் தொடர்பான தெளிவூட்டல்கள் ஊடகங்கள் மூலமாகவோ நிகழ்நிலையிலோ மேற்கொள்ளப்படலாம். மேற்படி விடயங்களில் ஆழமான அறிவுடையோர் தெளிவூட்டல்களில் ஈடுபடலாம்.

எனவே காலம் தாழ்த்தாமல் தேசிய மக்கள் சக்தி வடக்கு மக்கள் மட்டுமல்ல, கிழக்கு மற்றும் மலையக மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடியதான ஒரு திட்ட வரைவை அறிவிக்கவேண்டும். இந்தத்திட்ட வரைவைத் தயாரிப்பதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் நாங்கள் எப்போதும் உங்களுக்கு உறுதுணையாக இருப்போம் என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-6)

## 87,000 மாணவர்கள் பல்கலைக்கு விண்ணப்பம்

கொழும்பு, ஜூலை 21

இந்த ஆண்டு 87 ஆயிரம் மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு இணையத்தளத்தினூடாக விண்ணப்பித்துள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளன. மாணவர்கள் விண்ணப்பத்தில் ஏதேனும் திருத்தங்களை மேற்கொள்வதற்கு வழங்கப்பட்ட காலஅவகாசம் நேற்றுமுன்தினத்துடன் நிறைவடைந்துள்ளது.

ஓகஸ்ட் மாத இறுதிக்குள் பல்கலைக்கழகங்களில் இளங்கலைப் பட்டப்படிப்புகளுக்கான வெட்டுப் புள்ளிகளை அறிவிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

### நல்லூர் திருவிழாவின்போது

## கடந்த ஆண்டு பக்தர்களுக்கு ஏற்பட்ட அசௌகரியத்துக்கு இடமளியாதீர்கள்

### யாழ். மாநகரசபையிடம் கோரிக்கை

**யாழ்ப்பாணம், ஜூலை 21**

**நல்லூர்க் கந்தன் பெருந் திருவிழாக் காலத்தில் அடியவர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை நீக்குமாறு இந்து தன்னார்வத் தொண்டர் சங்கம் யாழ். மாநகரசபை ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.**

இது தொடர்பாக மேற்படி சங்கத்தினர் கடந்த வியாழக் கிழமை யாழ். மாநகரசபை ஆணையாளர் ச.கிருஷ்ணேந் திரனுக்கு அனுப்பி வைத்துள்ள கோரிக்கைக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். மாநகரசபையானது நல்லூர்க் கந்தசுவாமி ஆலய நிர்வாகத்துடன் இணைந்து ஒரு மாத காலத் திருவிழாவைக் கடந்த காலங்களில் மனநிறைவாக நடத்தியமை மகிழ்ச்சியைத் தருகிறது.

எனினும், கடந்த ஆண்டில் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத் திருவிழாக் காலத்தில் ஆலயத்துக்கு வருகை தந்த அடியவர்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்கள் குறித்த தகவல்களைப் பத்திரிகைச் செய்திகள் மற்றும் பக்தர்கள் தெரிவித்த அதிருப்தி கருத்துகள் மூலம் அறிந்துகொண்டோம்.

பரிசீலனை செய்யப்பட்ட அனுபவங்கள் மற்றும் பத்திரிகைத் தகவல்களின் அடிப்படையில் கடந்த ஆண்டு அளவுக்கு அதிகமான வீதித் தடைகள் பொருத்தமற்ற பகுதிகளில் அமைக்கப்பட்டதால் அடியவர்கள் சனநெரிசலுக்குட்பட்டு மயக்கம் அடைந்து பெரும் அவலத்தைச் சந்தித்தனர்.

அவசரமான நேரத்தில் நோயாளர் காவு வண்டிகூட நுழைய முடியாத நிலை காணப்பட்டது.

மேலும் கடந்த ஆண்டு அளவுக்கு அதிகமான கடைகள் வியாபார தரகர்களுக்காகக் குத்தகைக்கு வழங்கப்பட்டன.

இதனால், பொதுமக்கள் நடமாட முடியாமல் வீதியின் மத்திய பகுதிக்குத் தள்ளப்பட்டனர். குறிப்பாகச் சப்பரத் திருவிழா நாளில் ஏற்பட்ட நெருக்கடியின்போது நடைபாதையில் நகர்ந்து கொண்டிருந்த பக்தர்களை வியாபாரிகள் 'எங்கள் கடைகளுக்குள் வர வேண்டாம், நாங்கள் காசு கொடுத்துத் தானே கடைகளைப் பெற்றுள்ளோம்' என வீதியின் நடுப் பகுதி நோக்கி விரட்டியதைக் கண்கொண்டு பார்க்க முடிந்தது.

தொடர்ச்சியான வீதித் தடைகளுக்கு இடையில் நடைபாதையின் இருபுறமும் வியாபார நிலையங்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த் சூழ்நிலையில் பெருமளவு மக்கள் தெருவின் நடுப்பகுதியில் அபாயகரமான விதத்தில் சிக்குண்டு இருந்தனர். நூற்றாண்டுக் காலம் கடந்த நல்லூர் ஆலய மாண்பானது கெடும்வகையில் கடந்த ஆண்டு சமூக வலைத் தளங்களில் எழுந்த விமர்சனங்களும், கிண்டல்களும் கண்டு பெரும் மன வேதனையடைந்தோம். எனவே, இந்துத் தன்னார்வ தொண்டர் சங்கம் சார்பாகக் கீழ்க் காணும் கோரிக்கைகளை முன் வைக்கிறோம்.

ஆலயத்துக்கு வருகைதரும் அடியவர்களுக்கு நெரிசலற்ற மற்றும் சுகாதாரமான சூழலை உறுதிப்படுத்தும் வகையில் அடியவர்கள் கூட்ட நெரிசலில் சிக்காமல் இலகுவாக நகரக்கூடிய விதத்தில் வீதித் தடைகளை அமைத்தல், பொருத்தமற்ற தடைகளை நீக்கல். வியாபார நிறுவனங்கள் மற்றும் விளம்பரங்கள் மெய் அடியார்களின் வழிபாட்டு உரிமைக்கும், பக்திமயமான சூழ்நிலைக்கும் இடையூறாக அமைவதால் திருவிழாக் காலத்தில் ஆலயச் சுற்றுப்புறங்களில் கடைகள் மற்றும் வியாபாரிகளுக்கு அனுமதியளிக்காமல் மக்கள் அமைதியாக வழிபாட்டை மேற்கொள்ளும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

கடந்த ஆண்டைப்போல் அல்லாமல் நோயாளர்காவுவண்டி மற்றும் அவசர சேவைகள் தேவையான இடத்தை இடையூறின்றி அடைவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-20-66)



## பேருந்துகளுக்கு போட்டி: அந்தரிப்பதோ மக்கள்!

கிளிநொச்சி, ஜூலை 21

அரச, தனியார் பேருந்துகளின் போட்டியால் தொடர்ந்து பாதிப்புகளை பயணிகள் எதிர்கொள்வதாக விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. பயணிகளை ஏற்றுவதற்காக அரச, தனியார் பேருந்துகள் முண்டியடித்து பயணிக்கின்றன. இதனால் பயணிகளுக்கு உயிராபத்துகள் ஏற்படுவதுடன் விபத்துகளும் அதிகளவில் நிகழ்கின்றன.

அண்மையில் கிளிநொச்சி மாவட்டச் செயலகம் முன்பாக இருபேருந்துச் சாரதி மற்றும் நடத்துநர்களுக்கிடையில் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. பயணிகளை ஏற்றுவதற்கு முண்டியடித்து பயணித்த நிலையில் இந்த முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. இதனால் வீதிப் போக்குவரத்து பாதிக்கப்பட்டதுடன், பயணிகளும் அசௌகரியங்களை எதிர்கொண்டனர். எனவே தொடரும் அரச - தனியார் பேருந்துகளின் முரண்பாட்டைத் தீர்த்து, பயணிகளின் பாதுகாப்பாக பொதுப்போக்குவரத்தை உறுதிப் படுத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-113)

## சஜித்தான் வெல்வார் 'றோ' கணிப்பாம்

### கதையளக்கிறது ஐ.ம.ச.

கொழும்பு, ஜூலை 21

ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவே வெற்றிபெறுவார் என இந்திய உளவுப் பிரிவான 'றோ' அமைப்புகூட தெரிவித்துள்ளது என தகவல் கிடைத்துள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்றத் தேர்தலை ஜனாதிபதி நடத்தமாட்டார் என நம்புகின்றோம்.

அவ்வாறு நாடாளுமன்றத்தைக் கலைத்து, தேர்தலை நடத்தினால் கூட ஜனாதிபதித் தேர்தல் உரிய காலப்பகுதியில் நடத்தப்பட்டாக வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவே வெற்றிபெறுவார். 'றோ' அமைப்பு கூட இதனைத் தெரிவித்துள்ளது என தகவல்கிடைத்துள்ளது- என்றார். (ஒ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






## விழிப்புணர்வூட்டும் நிகழ்வு!


யாழ்ப்பாணம், ஜூலை 21

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் யாழ்ப்பாணம் தாதியர் பயிற்சிக் கல்லூரியின் அலுவலர்களுக்கான சிறுவர் பாதுகாப்பு விழிப்புணர்வூட்டும் நிகழ்வு, உதவி மாவட்டச் செயலர் உ.தர்ஷினி தலைமையில் தாதிய பயிற்சிக் கல்லூரி மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன் தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (ஒ-22,66)



கிளிநொச்சி முருகானந்தாக் கல்லூரியின், 2024 ஆம் ஆண்டுக்கான மாணவர் நாடாளுமன்ற அமர்வு, நேற்று முன்தினம் நடைபெற்றது. கல்லூரியின் முதல்வர் அரசரட்ணம் பங்கையற்செல்வன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக விஞ்ஞானப் பாட ஆசிரிய ஆலோசகர் பூ.திருக்குமார், சிறப்பு விருந்தினராக 'லீட்ஸ்' நிறுவனத்தின் இணைப்பாளர் தே.அனுஜன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ப-113)



## குளங்களைத் தூர்வாரி புனரமைக்கத் திட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 21

புலம்பெயர் நயினாதீவு அபிவிருத்திக் கழகங்களின் அனுசரணையுடன் அரச திணைக்களங்கள், உள்ளூர் அமைப்புகள் மற்றும் பயனாளிகளின் ஆதரவுடன் தூர்வாரி புனரமைக்கப்படவுள்ள பெருங்குளம் மற்றும் கிராய்க்குளம் ஆகியவற்றின் ஆரம்ப அளவீட்டுப் பணி கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது. இதற்குரியதிட்ட அறிக்கை கிடைக்கப் பெற்றதும் குறித்த திட்டம் உடனடியாக ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-22,66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் வெளியீடும் அங்குரார்ப்பணமும்

யாழ்.மருத்துவ சங்கத்தின் ஏற்பாட்டில், இணையத் தளத்தின் அங்குரார்ப்பணமும், பிள்ளை வளர்ப்பு நூல் வெளியீடு நிகழ்வும், யாழ். போதனா மருத்துவ மனை தாதியர் பயிற்சிப் பாட சாலை விரிவுரை மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளன. (ப)




**ஈழத்து கைலாய ஜோதிட நிலையம்**
இந்தியாவில் ஆன்மீகத்துறையில் 10 வருடங்களாக புகழ்பெற்ற
**அம்மன் அருள் வாக்கு**
தினமும் காலை : 9.00 - 12.00 மணிவரை
மாலை : 3.00 - 05.00 மணிவரை
- கல்வியில் முன்னேற்றம் இல்லையா ?
- குழந்தைப் பாக்கியம் கை கூடவில்லையா?
- கணவன் - மனைவி பிணக்கா ?
- பிரிவால் வேதனையா? தொழில் பிரச்சினையா?
- வாழ்வில் முன்னேற்றம் இல்லையா?
- மாங்கல்ய பாக்கியம் கை கூடவில்லையா?
- வெளிநாடு செல்லத் தடையா?
- அடிக்கடி நோய் ஏற்படுகின்றதா?

அனைத்திற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
**திருமதி வே. மோகனதாஸ்**
இல.77, கண்டி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 071 241 1234, 021 221 1239
வெளிநாட்டவர்களும் அருள்வாக்கு பெற தொடர்பு கொள்ளவும்
+94 712 411 234
(CS969) J-1

## விற்பனைக்குண்டு
Toyota CHR GT (CBG xxxx)
2018 ம் ஆண்டு வாகனம்
யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உள்ளது.
தொடர்புகளுக்கு:
**076 693 2227**

## THE ROYAL COLLEGE OF JAFFNA
தனியார் கல்வி நிறுவனம் - சங்கானை.
31 மாதங்களில் இலக்கணப் பிழையின்றி ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப் பயில
By விக்னேஸ்வரன் ஆச்சார்யார்
(26 வருட அனுபவம்
மாதக்கட்டணம் 6000 /-
குபேரன் கட்டட மாடி , சங்கானை.
TeP: 077 675 1649
(CS/55718) N-1

## மாபிள் வேலை
உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.
ஒரு சதுர அடி - 100 ரூபாய்.
**077 334 1281**
(287031) N-1

## மணமகன் தேவை
1992, இந்து, அஸ்வினி, CONSULTANT, கைதடி.
மணமகள் பதிவு இல: 10797.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமணசேவை
அழையுங்கள் 076 664 9401

## கடைகள் வாடகைக்கு
யாழ். ஆஸ்பத்திரி வீதியில் கடைகள் வாடகைக்குண்டு.
அலுவலகங்களுக்கும் ஏற்றது.
தொடர்பு:- **077 162 0626**
(CS/55717) N-1

## விசா ஆலோசனை சேவை
Visa, நிராகரிக்கப்பட்ட விசா, குடும்ப விசா, சேவைவிசா போன்றவற்றினை எமது உள்நாட்டு வெளிநாட்டு ஆலோசகர்கள் மூலம் விரைவாக பெற்றுக்கொள்ளலாம். கனடா, UK, இத்தாலி, அமெரிக்கா, நெதர்லாந்து போன்றவற்றுக்கான Work order உள்ளன.
ILTS ஒழுங்குகள் Student Visa தூதுவராலய Appointment, Money Spoincer சகல ஆவணங்களும் சட்டரீதியாக தயாரித்துத் தரப்படும். ஜேர்மன் நாட்டுக்கு பெயின்டிங்வாஸ், மெக்கானிக் தேவை.
தொடர்பு:-
077 604 0373
London: +44 740 508 6762
(CS/28429) N.1

## மணமகள் தேவை
1994, இந்து, மஹம், LECTURER, புங்குடுதீவு.
மணமகன் பதிவு இல: 10621.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமணசேவை
அழையுங்கள் 076 664 9401

## மாவிட்டபுரம்
## காணி விற்பனைக்கு
வீமன்காமம் அருகில் 36 பரப்பு, 20 பரப்பு காணிகள் விற்பனைக்குண்டு
1 பரப்பு – 12 இலட்சம்
தொடர்புகளுக்கு :– விமல்
**0777348766**

## மணமகன் தேவை
1994, இந்து, ரோஹினி , ACCOUNTANT, யாழ்ப்பாணம்.
மணமகள் பதிவு இல: 10577.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமணசேவை
அழையுங்கள் 076 664 9401

## Vacancy
Construction Company ஒன்றில்
Technical Officer Assistant
Contact No: 075 346 0179
Email : peraengineering.pvt@gmail.com
Salary : 35000 to 40000
Experience : Relevant Feild

## இணைப்ப இணையத்தளம் வழங்கும் அடுத்த தலைமுறை திருமண சேவை
தமிழ் உலகிலேயே முதன் முறையாக நவீன தொழில்நுட்பங்கள் கொண்டு அறிமுகமாகின்றது இணைப்ப நவீன திருமண சேவை. ஏராளமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வரன்களை உங்கள் தெரிவிற்கேற்ப அணுகி, தொடர்பு கொண்டு உங்கள் துணையை தெரிவுசெய்யமுடியும்.
பதிவுக் கட்டணம் இல்லை இப்பொழுதே இணையுங்கள் இணைப்பவுடன்
Ts&Cs apply
Www.inaipa.com
(CS/55716) J-1

## மணமகள் தேவை
1985, இந்து, ஹஸ்தம், TECHNICAL OFFICER, நாவற்குழி.
மணமகன் பதிவு இல: 10586.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமணசேவை
அழையுங்கள் 076 664 9401


## சட்டத்திற்கும் மனித உரிமைக்குமான நிலையம்
## மனித உரிமைகள் தொடர்பான டிப்ளோமா கற்கை நெறிக்கான விண்ணப்பம் கோரல்

சட்டத்திற்கும் மனித உரிமைக்குமான நிலையமானது வட மாகாணத்தில் மனித உரிமைகள் கல்வியில் தனித்துவமானதும் முன்னோடியுமானதுமான நிறுவனமாகும். சமூகத்தில் மனித உரிமைகளை மேம்படுத்தவும் பாதுகாக்கவும் மனித உரிமைகளுக்கெதிராக குரல் கொடுக்கவும் வினைத்திறனாக செயலாற்றவும் கூடிய மனித உரிமை பாதுகாவலர்களை உருவாக்கும் நோக்கில் கடந்த ஏழு வருடங்களாக இந்நிறுவனம் மனித உரிமை தொடர்பான டிப்ளோமா கற்கை நெறியினை வெற்றிகரமாக நடாத்தி வருகிறது. இக்கற்கை நெறிக்காக புதிய அணி மாணவர்களை தற்போது இணைத்துக் கொள்ளவிருப்பதால் குறித்த கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்களிடமிருந்து தகுதியான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- வகுப்பு நடைபெறும் காலம் : வாராந்தம் ஞாயிற்றுக்கிழமை மாத்திரம்.
- கற்கை நெறிக்கான காலம் : ஆறு மாதங்கள்
- கட்டணம் : இலவசம்
- வயதெல்லை : 18 - 45 வரை

**விண்ணப்பிப்பதற்கான அடிப்படை தகைமைகள்**

- க.பொ.த சாதாரண தரத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
- க.பொ.த.உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
- அல்லது மனித உரிமைகள் மற்றும் சமூக செயற்பாடுகளில் மேற்குறித்த தகைமைகளுக்கு இணையான அனுபவம் அல்லது இதர தகைமைகள்


**விண்ணப்பிக்கும் முறை**

- சுயவிபரக் கோவையை தபால் மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம்.
- **விண்ணப்ப முடிவுத் திகதி : 04.08.2024**

**மேலதிக தொடர்புகளுக்கு:**
தொ.பே.இல : 0212241494
மின்னஞ்சல் : lhrchumanrightsunit@gmail.com
முகவரி : No.64, Temple Road, Jaffna.

## மரண அறிவித்தல்

தோற்றம்
23 . 05 . 1960



மறைவு
18 . 07 . 2024

**சச்சிதானந்தன் சிவசிதம்பரநாதன்**

காரைநகர் மணற்காட்டைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சச்சிதானந்தன் சிவசிதம்பரநாதன் கடந்த 16.07.2024 செவ்வாய்க்கிழமை காரைநகரில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சச்சிதானந்தன் மற்றும் இராஜேஸ்வரி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், நடராஜா மற்றும் காலஞ்சென்ற நாகேஸ்வரி தம்பதியரின் மருமகனும், ஜெயலட்சுமியின் அன்புக் கணவரும், தேனுகா, கம்ஷா, மதுஷா ஆகியோரின் பாசமிகு தந்தையும், நாகேஸ்வரி (ஓய்வுபெற்ற சிரேஷ்ட முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், யாழ். மாநகர சபை, சித்த மருத்துவப் பகுதி), சிவசத்தியநாதன் - (கனடா), நாகராணி (முன்னாள் பற்சிகிச்சையாளர்-கனடா), நாகவதனா (முன்னாள் ஆசிரியை -யாழ். செங்குந்தா இந்துக் கல்லூரி-பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்வராஜா (சவுதி), விமலினி (கனடா), சோதிரூபன் (கனடா), திலீபன் (பிரான்ஸ்), அருள்ராஜா (ஜேர்மனி), லோகராஜா (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.07.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணியளவில் அவரது காரைநகர் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

10/2, சைவ மகாசபை வீதி,
மணற்காடு, காரைநகர்

தகவல்: குடும்பத்தினர்
077 6913 217
(CS 964) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ரோயல் மருத்துவமனை நடத்தும் இலவச செயன்முறைக் கருத்தரிப்பு ஆலோசனை முகாம்

AUGUST **24** வவுனியா | AUGUST **25** யாழ்ப்பாணம்

உலகப் புகழ்பெற்ற செயன்முறைக் கருத்தரிப்பு சிகிச்சை நிபுணரான பிரசாந்த் மருத்துவமனையின் தலைமை மருத்துவரை உங்கள் மண்ணிலேயே சந்தித்து, உங்கள் கவலைக்குத் தீர்வு காண அரியதோர் வாய்ப்பு!

**தாய்மை இனியும் கனவல்ல!**



**பிரசாந்த்** மருத்துவமனை தகவல் மையம்

ரோயல் மருத்துவமனை, 62, W.A. சில்வா மாவத்தை, வெள்ளவத்தை, கொழும்பு - 06.

அழையுங்கள்: **0754000012, 0777215588**

## ஆண்டு விழா

யாழ்., ஜூலை 21

சோலைக்குயில் அவைக்காற்றுக் களத்தின் 36ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் ஆலயத்தின் கல்யாண மண்டபத்தில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பொதுமருத்துவநிபுணர் சி.சிவன்சுதன், தெல்லிப்பழைப் பிரதேச செயலர் திருமதி சிவகெங்கா சுதீஸ்னர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆங்கில மொழிக் கற்கைகள் பீட முன்னாள் தலைவர் கலாநிதி கருணாதேவி சிவாஜி, ஓய்வுநிலை ஆசிரியை திருமதி ராஜி கெங்காதரன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ம-66)

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் கொழும்புத்துறை சுவாமியார் வீதியில்**
அந்தோனியார் கோவிலில் இருந்து 350m தூரத்தில்
**3 பரப்புக் காணியுடனான வீடு விற்பனைக்கு உண்டு.**
விலை பேசித் தீர்மானிக்கப்படும்.
(தரகர் தொடர்பு கொள்ளவேண்டாம்)

தொடர்பு:- **077 614 6434**

(CS/55370) J-1

## மணமகள் தேவை

பிரான்ஸ் இல் வதிவுடமை உள்ள இந்து கௌரவ (V) குலத்தைச்சேர்ந்த விவாகரத்து பெற்ற மணமகனுக்கு மணமகள் தேவை. திருமணமாகாத அல்லது விதவை அல்லது விவாகரத்து ஆகிய குழந்தைகள் இல்லாத 40 /45 வயதுள்ள நன்கு படித்த மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு:
இலங்கை தொலைபேசி (Phone) இலக்கம்
**076 804 9077**
France Phone தொலைபேசி Whatsapp இலக்கம்
**0033 753 742 021**

(Cs/28551) N-1

## வீடு விற்பனைக்கு

கொழும்புத்துறை வீதி பாண்டியந்தாழ்வில் 3 1/2 பரப்புக் காணியில் சகல வசதிகளையும் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு.

**077 614 6434**

(CS/55704) N-1

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சுண்டிக்குளி ஈச்சமோட்டையில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு:- **077 614 6434**

(CS/55703) N-1

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நாவற்குழி A-9 வீதி முகப்புடன் 8 பரப்பு காணி விற்பனைக்குண்டு.**

- 1 பரப்பின் விலை 10 00 000/= (10 லட்சம்)
- நல்ல சூழல்
- தரகர் தேவையில்லை
- நாவற்குழி சந்தி 1/2 Km தூரம்
- யாழ்ப்பாணத்திலிருந்து 3 1/2 Km தூரம்
- 108 சிவன் கோவிலுக்கு அருகாமை

தொடர்பு: **077 468 3354**

## காணி விற்பனைக்கு

- கொழும்புத்துறை விதானையார் வீதியில்
- 2 1/2 பரப்புக் காணி 4 பக்கமும் சுற்று மதிலுடன் விற்பனைக்கு உண்டு.
- 1 1/4 பரப்பாகவும் பிரித்துத் தரப்படும்
- சிறந்த சுற்றுச் சூழல்
- நல்ல நீர் ஊற்று
- A9 வீதி 7 நிமிடம்
- கச்சேரி 10 நிமிடம்
- சுண்டுக்குழி, சென் ஜோன்ஸ் பாடசாலைகள் 7 நிமிடம்

தரகர் தேவையில்லை.

காணி உரிமையாளர்
**076 659 0583**

- யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை பிரதான வீதியில் காப்பட் வீதி முகப்பு 200 அடி 12 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
- எந்தவொரு வியாபார நோக்கத்திற்கும் சிறந்த காணி.
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

காணி உரிமையாளர்
**076 659 0583**
**070 575 8086**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலைக்காக கொழும்புக்கு சென்றவரைக் காணவில்லை

யாழ்ப்பாணம், ஜுலை 21

வேலைக்காக கொழும்புக்குச் சென்ற இளைஞனைக் காணவில்லை என்று மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் அவருடைய பெற்றோரால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த மூன்று மாதங்களாக கொழும்பில் பணியாற்றிவரும் அந்த இளைஞர், இடையிடையே வீட்டுக்கு வந்து சென்றுள்ளார். எனினும், கடந்த ஒரு வாரமாக வீட்டாருடன் தொடர்பில்லாமல் உள்ளார். இதையடுத்தே இந்த விடயம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

(ம-125)

**வீடு வாடகைக்குத் தேவை**

சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு :
076 7956 309, 0775819527

**விற்பனைக்குண்டு**

1. வியாபார நிலையத்திற்கு தேவையான 04 கண்ணாடி சோகேஸ், ST-800 ஸ்பைடல் பைண்டிங் மிஷின் மேசைகள் விற்பனைக்குண்டு.
2. (பாட்ஸ்) Toshiba-256, Ricoh Colur Printer, HP. ink Toak 315.

தொடர்புகளுக்கு:
076 826 2099

**காணி விற்பனைக்கு**

St.Mary's வீதி, முல்லைத்தீவில் 6.36 பரப்புக் காணி மாதா கோயில், கடற்கரை, கச்சேரி ஆகியவற்றிற்கு அருகாமையில் உடனடி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
0740 380814, 074 038 1195

**வீடு வாடகைக்கு**

யாழ். அல்லைப்பிட்டியில் பிரதேச சபைக்கு அன்மையில் பிரதான வீதியில் சகல வசதிகளுடன் வாகனங்கள் நிற்பாட்டக்கூடிய இட வசதியுடைய வீடு வாடகைக்கு உண்டு. தனியாருக்கும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் பொருத்தமானது. உடனடியாக வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு: 077 884 9677

(CS 55723) V-1

**வீட்டுப்பணிப்பெண் தேவை**

யாழ். நகரை அண்மித்த பகுதியில் வீட்டு வேலை செய்வதற்கு வீட்டு பணிப்பெண் தேவை.

தொடர்பு : 077 8486 515

**வீடு வாடகைக்குண்டு**

நான்கு அறைகளைக் கொண்ட வீடு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் வாடகைக் குண்டு. நிறுவனங்கள் நடாத்துவதற்கு உகந்தது. தரகர்கள் தேவையில்லை

தொடர்புகளுக்கு:
077 321 2833

## மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 10 . 1946 — மறைவு 19 . 07 . 2024



### சோமசுந்தரம் புவனேந்திரன் (இந்திரன்)

(முன்னாள் வெலிங்டன் தியேட்டர் காசாளர், மாவை இன்டஸ்ரிஸ் உரிமையாளர், சோமசுந்தரம் களஞ்சிய உரிமையாளர்)

நல்லூர் நாவலர் வீதி, ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும், மாவிட்டபுரத்தை வசிப்பிடமாகவும், நல்லூர் செட்டித்தெருவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் புவனேந்திரன் நேற்றுமுன்தினம் (19.07.2024) வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - சிவபாக்கியம் தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - அன்னபரிபூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும், வரதலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும், செந்தில்ரூபன் (இஞ்சினியர் - நியூசிலாந்து), நந்தினி (வைத்தியர் - யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜானகி (நியூசிலாந்து), மயூரன் (வைத்தியர்- யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான ஸ்ரீஸ்கந்தராஜா, ஸ்ரீநாதன், கருணானந்தன் மற்றும் ஸ்ரீதரன், ஸ்ரீரஞ்சன், சந்திராதேவி, ஜெயசிறி, விமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற இரத்தினபாலசிங்கம் மற்றும் மங்கையர்க்கரசி, ஜெயபாலசிங்கம், அன்னலட்சுமி, தனலட்சுமி ஆகியோரின் மைத்துனரும், ஆருஷயா, அட்சரன், ஆருத்திரா, அபிநயன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.07.2024) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

29, செட்டித்தெரு,
நல்லூர்.

தகவல்: குடும்பத்தினர்
மனைவி - 077 729 6362
மகன்
மகள் - 077 766 7036

## மரண அறிவித்தல்

மலர்வு 23 . 02 . 1931 — உதிர்வு 20 . 07 . 2024



### திருமதி தம்பிஐயா இராசாத்தி

இணுவில் கிழக்கை பிறப்பிடமாகவும், இணுவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராசாத்தி தம்பிஐயா நேற்று (20.7.2024) சனிக்கிழமை காலை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மூத்ததம்பி-சின்னம்மா தம்பதியரின் இளைய புதல்வியும், முதலித்தம்பி தம்பிஐயாவின் மனைவியும், வள்ளியம்மை, சின்னத்தங்கச்சி ஆகியோரின் சகோதரியும் மற்றும் சத்தியதேவி, சிவகுமாரன், மனோகரி, சோபிதா, கமலாசினி, பாலகுமார் ஆகியோரின் பாசமிகு தாயாரும், இராமச்சந்திரா, ஜெயகுமாரி, பாஸ்கரன், தேவபாலன், இராஜமனோகரன், கார்த்திகா ஆகியோரின் மாமியாரும், கீர்த்தனன், திபிகா, கஜனன், துஷ்யந்தி, தர்சன், ரமேக்கா, சிவலவன், அபிநயா, ஹரிகேஷ், பிரசாந்தி, பிரியங்கா, பிரதாயினி, பிரசாயினி, பிரணவி, சுகசிந்தவி, அக்ஷயன், சாஸ்வதாயி ஆகியோரின் பேர்த்தியும், நிஷான், டினோஜன், ரக்ஷான், பிரகதி, சப்தகி ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (21.07.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனகிரியைக்காக முற்பகல் 11.30 மணியளவில் தாவடி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

அளவோடை வீதி,
இணுவில் மேற்கு.

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



மறைவு :18.07.2024

### யாதவராயர் மனோன்மணி

வவுனியாவை பிறப்பிடமாகவும் குடியிருப்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி. யாதவராயர் மனோன்மணி (வவுனியா இலங்கை திருச்சபை தமிழ்கலவன் பாடசாலை C.C.T.M.S, ஓய்வுநிலை ஆசிரியர்) அவர்கள் 18.07.2024 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வெற்றிவேல்-அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், செல்லம்மா அவர்களின் பெறாமகளும், நாகநாதபிள்ளை-செல்லம்மா தம்பதிகளின் மருமகளும், அமரர் யாதவராயரின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஐயம் பிள்ளை கனகம்மா, சண்முகம், பசுபதி குழந்தைவேல், சோமசுந்தரம் குணமணி மற்றும் மகேந்திரராஜா ஈஸ்வரி, சிவலிங்கம் வசந்தராணி, மயில்வாகனம் பரமேஸ்வரி, மாங்களேஸ்வரன் ஆகியோரின் அன்புச்சகோதரியும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி நாகமுத்து, அம்பலவாணர் மங்களம், மருதையினார் மற்றும் ராமநாதன் பார்வதிப்பிள்ளை, ஆகியோரின் அன்பு மைத்துனியும், குணசீலன், பத்மசீலன், திருஞானசுந்தரம், ஜெயசீலன், சசிகலா ஆகியோரின் பாசமிகு தாயாரும், உருத்திரகுமாரி, சாகரிக்கா, சிவபாலினி, யுதிஸ்ரிகா, சொரூபன் ஆகியோரின் பாசமிகு மாமியும், வீஸ்மன், விசாகன், வைஸ்ணவி, ரிஷி, திவ்யா, ரமணன், ஹரணி, ஹஸ்வினி, சுருதி ஆகியோரின் அன்புப்பேர்த்தியும், இஷானி யின்பூட்டியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (22.7.2024) திங்கட்கிழமை காலை இலக்கம் 10, குடியிருப்பு, வவுனியாவில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று முற்பகல் 11 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பூந்தோட்டம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு: What's up or Viber....

தகவல்:குடும்பத்தினர்.

[illegible]63161851(மகன்)
[illegible]-00447957616250(மகன்)
சொரூபன்-00447403712235(மருமகன்)
பத்மன்-00447485403921(மகன்)
ஜெயம்-00447888854838(மகன்)
மங்களேஸ்வரன்-0014164972889(தம்பி)

(CR 42863) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னுடைய...

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"தமிழ்த் தேசியக் கட்சிகள் என்ற முறையிலும், தமிழ்த் தேசிய உணர்வுகளைக் கொண்டவர்கள் என்ற முறையிலும் எங்களுக்கும் சிறீதரனுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. இந்த விதத்திலே என்னுடைய அருமை மாணவன் பலவிதமான தகைமைகளைக் கொண்டிருந்தாலும் தமிழ்த் தேசிய உணர்ச்சி அவருக்கு இல்லை. அவர் எல்லாவற்றையும் மூளையால் பார்ப்பாரே ஒழிய உணர்வினாலோ உணர்ச்சியினாலோ பார்க்கக் கூடியவர் அல்லர்.

அந்த விதத்தில் தமிழரசுக் கட்சியினுடைய தலைவராக சிறீதரன் வருவதைத் தான் நாங்கள் எதிர்பார்க்கின்றோம். அதனையே வரவேற்கின்றோம். அத்துடன், இதுரை காலமும் தமிழ்த் தேசியத்துக்குக் குரல் கொடுத்து வருகின்ற ஒருவர் என்ற முறையிலே அவரை நாங்கள் எங்களின் தேசிய மாநாட்டுக்கு விருந்தினராக அழைத்திருக்கின்றோம். அதே போன்று தான் பேராசிரியர் கணேசலிங்கத்தையும் அழைத்திருக்கிறோம். தமிழ்த் தேசியத்தின் அடிப்படையிலே நாங்கள் முற்செல்ல வேண்டும் என்பதில் எங்களிடத்தில் மாற்றுக் கருத்தில்லை" - என்றார்.

(அ-ம-20)

## த.ம.கூட்டணி...

யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கத்தில் இன்று பிற்பகல் 3 மணியளவில் தமிழ்மக்கள் கூட்டணியின் தலைவர் க.வி.விக்னேஸ்வரன் தலைமையில் மாநாடு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் பிரதம விருந்தினராகவும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரசறிவியல் துறையின் தலைவர் கே.ரி.கணேசலிங்கம் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(அ-ம-66)

# மாணவன் மீது ஆசிரியர் தாக்குதல்

## பொலிஸாரிடம் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 21

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள கிறிஸ்தவ பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் மாணவன் மீது ஆசிரியர் சரமாரியாக தாக்குதல் நடத்தியுள்ளதையடுத்து, கோப்பாய் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது.

மாணவனுக்கு உரிய மருத்துவம் வழங்கப்பட்டுள்ளதுடன், முறைப்பாட்டுக்கு அமைய ஆசிரியரைக் கைது செய்யும் நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

ஒப்படை சமர்ப்பிக்காதமைக்கே தாக்குதல் நடத்தப்பட்டதாக பொலிஸ் விசாரணைகளின்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-125)

## மணமகன் தேவை

யாழிந்து (V) 1981, பூராடம் விவாகரத்துப் பெற்ற மணமகளுக்கு மணமகன் தேவை.
(10இல் சூரியன் செவ்வாய்)
தொடர்புகளுக்கு: 077 9649 245

## வேலையாட்கள் தேவை

காணி துப்பரவு வேலை செய்யக்கூடியவர் (பகுதி/முழு) நேரம் தேவை
தொடர்பு: 077 993 8348

## வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வீடொன்றில் வயோதிப ஆண் ஒருவரைப் பராமரிப்பதற்கு வீட்டில் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய பணியாளர் உடன் தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
(CS/55670) 1-1
078 731 1049, 070 467 4672


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி சந்தியில் காணிகள் விற்பனைக்குண்டு.

- A9 பாதைக்கு அருகாமையிலும், தண்ணீர்த்தாங்கிக்கு முன்பகுதியிலும், 11 அடி அகலப் பாதையுடன் 6 1/2, 5 பரப்புக் காணித்துண்டுகள் உண்டு.
- நன்னீர் ஊற்றுச் சூழலுடன் சகல வகையான விற்பனை நிலையங்களும், தொழில் நிலையங்களும் அருகாமையில் அமைந்துள்ளன
- தரகர் தொடர்பு தேவையில்லை.

தொடர்புகளுக்கு:
076 653 3860, 077 318 8770

# மரண அறிவித்தல்



## அமரர் வேலுப்பிள்ளை சுந்தரலிங்கம் (சண்டி)

மட்டுவில் வடக்கு சாவகச்சேரியை பிறப்பிடமாகவும், சரசாலை வடக்கு மற்றும் இராஜவீதி தோப்பு அச்சுவேலியை வதிவிடமாகவும் கொண்ட அமரர் வேலுப்பிள்ளை சுந்தரலிங்கம் (சண்டி) அவர்கள் 17-07-2024 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-கனகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நடராசா-மாணிக்கம் தம்பதியினரின் அன்பு மருமகனும் புஸ்பவதியின் பாசமிகு கணவரும் மயூரன்,மதீசன், மதிபன் (இலிகிதர் கமநல அபிவிருத்தித் திணைக்களம் யாழ்ப்பாணம்), சங்கீதா (சுவிஸ்), மதன் மயூரி (லண்டன்), மஞ்சுதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் கணேசபிள்ளை அமரர் சுப்பிரமணியம், அமரர் சிவஞானம், சித்திராதேவி, மல்லிகாதேவி பாலச்சந்திரன், தாமரைச்செல்வி, இந்திராணி அவர்களின் பாசமிகு சகோதரனும் பிறேமாவதி, சந்திராதேவி, முத்துலிங்கம், பிருந்தாபன், சகுந்தரேஸ்வதி (வதனி), கிரிதரன் (இ.மி.ச ஓய்வூதியர்), செல்வரட்ணம், சரஸ்வதி, மனோகரன், அமரர் மகேந்திரன் ஆகியோரின் மைத்துனரும் செல்வராசா, இந்திராணி, சத்தியபாமா ஆகியோரின் உடன்பிறாவா சகோதரனும், மகிழ்தினி (ஆசிரியை யா/மத்தியகல்லூரி), சுதர்சன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அக்சயன் சேந்தூரி அஸ்விகன், தாரதி, பவிண் (சுவிஸ்), ஆதிரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனும், மஞ்சுளா, பிறேமளா (பணிப்பாளர் ஆதார வைத்தியசாலை மல்லாகம்), கஜீபன், கஜந்தன், அமரர் கிரிபாலன், கிரிராஜன், கிரிஷாந்தினி, ஹரிஸ்ணன் (மட்டக்களப்பு பல்கலைக்கழகம்), மதுஷ்ணன், மனோரதி, செல்வேந்திரன் (கனடா), தர்மஸ்ரீ (இ.போ.ச காரைநகர் சாலை), சுரேந்திரன் (பிரான்ஸ்), சர்மிளா (ஜேர்மனி), அமரர் சுயந்தன் (ஜேர்மனி), ஆகியோரின் சிறிய தந்தையும், சஞ்சுதன் (சுகாதார பணிமனை நட்டாங் கண்டல்), அர்ச்சனா, மிதுர்சன் (யாழ்.பல்கலைக்கழகம்), பிரதீபா (லண்டன்), ராஜமாதுளன், கோகுலரமணன் (அவுஸ்ரேலியா), கார்த்திகன் (யாழ் பல்கலைக்கழகம் வெளிவாரி), மனுவித்ரகன் (தெல்லிப்பழை மகாயனா கல்லாரி பழைய மாணவன்), விகர்ணன் (பிரான்ஸ்), விஜிகரன், விஜிதா (பிரான்ஸ்), வினோதா, விமல் (பிரான்ஸ்), வித்தியா (பிரான்ஸ்), வினுஜன் (பிரான்ஸ்), கஜேந்திரன் (சுவிஸ்), கஜீபன், கஜரூபன் (ஜேர்மனி), கஜீதா, கஜந்தன் (சுவிஸ்), அமரர் கஜந்தா, கவிதா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இராஜவீதி தோப்பு அச்சுவேலியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இன்று (21.07.2024) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் தோப்பு இந்துமயானத்திற்கு பகல் 1.00 மணி அளவில் எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தோப்பு இராஜவீதி
அச்சுவேலி.

தகவல்:
குடும்பத்தினர்
077 638 4155, 077 633 6825

(CR 42864) V-1

# மரண அறிவித்தல்



## செல்வி அக்னஸ் நிமாலினி அருளானந்தம் (மஞ்சு)

**(ஆசிரியை, யா/உடுவில் மகளிர் கல்லூரி)**

ஈவினை தெற்கு, புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி அக்னஸ் நிமாலினி அருளானந்தம் (மஞ்சு) (ஆசிரியை, யா/உடுவில் மகளிர் கல்லூரி) 2024.07.20 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார், மரியான்தம்பி அருளானந்தம், (முன்னாள் இராணுவ வீரரும் மக்கள் வங்கி பாதுகாப்பு உத்தியோகத்தரும்) அருட்செல்வம் அருளானந்தம் ஆகியோரின் கனிஷ்ர புதல்வியும் திருமதி அன்றி நிருபா கமலகுமார் (ஆசிரியர், யா/சென்.ஜோன்ஸ் கல்லூரி) திருமதி.அஞ்சலின் நிறோஜினி அன்ரன்ராஜகுமார் (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஜோன் நிமல்ராஜ், அன்றூ நிதர்ஷன், அனன்ஷி நிஷாரா, அனஸ்லி நிஷோபன் ஆகியோரின் பாசமிகு சித்தியும் ஆன் நிரஞ்சனியின் பாசமிகு மாமியும் அல்ட்றின் நிவின்ஷனின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 2024.07.22 அன்று பி.ப 3.00 மணிக்கு ஈவினை தெற்கு, புன்னாலைக்கட்டுவனிலுள்ள இல்லத்தில் நடைபெற்று ஈவினை நல்லாயன் மெதடிஸ்த ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளு மாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புராதன...

சிவன் கோவில் மற்றும் கௌதாரி முனை பிள்ளையார் ஆலயம் என்பன தொன்மை வாய்ந்த தலங்களாக தொல்லியல் திணைக்களத்தால் அடையாளப் படுத்தபட்டிருந்த நிலையில், அவற்றின் புனரமைப்புக்காக 8 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதையடுத்தே அடுத்தமாதம் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. (அ-ம-125)

## பிறமொழிக்...

தமிழ்க் கலைகளையும், பண்பாட்டையும் யாழ்ப்பாணத்து மக்கள் இன்னும் கைவிடாமலிருப் பதைப் பார்க்கும் போது பெருமையாகவிருக்கிறது. பிறமொழிக் கலப்பில்லாமல் தமிழை இன்று பாதுகாப்பதும் யாழ்ப்பாணத் தமிழர்களே என்று புகழ்பெற்ற பட்டிமன்றப் பேச்சாளர் எஸ்.ராஜா தெரிவித்துள்ளார்.

அரியாலை சனசமூக நிலையத்தின் 75 ஆவது ஆண்டு பவள விழாவை முன்னிட்டு மாபெரும் இலக்கிய விழா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு அரியாலை சனசமூக நிலையத்தின் திறந்த வெளி அரங்கில் இடம்பெற்றது. நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"மற்றைய இடங்களில் அருகி வருகின்ற கலைகளையும், குறைந்து வருகின்ற பண்பாட்டுக் கூறுகளையும் யாழ்ப்பாணத்து மக்கள் இன்னும் இன்னும் பேணிப் பாதுகாத்து வருவதுடன் உலகெங்கிலும் கொண்டு சேர்த்து வருகிறார்கள் என்பதைப் பார்க்கும் போது எங்களுக்கு மகிழ்ச்சியாகவிருக்கிறது.

எமது முன்னோர்களின் புத்திசாலித்தனம், தீர்க்க தரிசனம், அவர்கள் இந்தச் சமூகத்தை நேசித்த விதம், வருங்காலத் தலைமுறை மீது அவர்கள் வைத்த பாசம் அத்தனையும் தான் கிராமியக் கட்டமைப்புகளின் தற்போதைய எழுச்சிக்குக் காரணம். நமக்கென்று ஒரு தமிழ்ச் சமூகம் காணப்படுகிறது. அந்தச் சமூகம் வீழ்ந்துவிடக் கூடாது என்று நமது முன்னோர்கள் பலரும் பாடுபட்டுள்ளமையை நாம் மனதில்கொண்டு செயற்படவேண்டும்.

தமிழ்நாட்டில் நாங்கள் ஆங்கிலம் கலந்துதான் தமிழைப் பேசுகிறோம். ஆனால், யாழ்ப்பாணத்துத் தமிழ் எவ்வளவு இனிமையானது. பல கலப்புகள் எமக்குள் வருகின்றன. இவ்வாறான நிலையில் யாழ்ப்பாணத்துத் தமிழுக்குள் மொழிக் கலப்பு வராமல் பார்த்துக் கொள்ளுங்கள். நீங்கள் நீங்களாகவே இருங்கள். மொழிக் கலப்பு வந்துவிட்டால் அடையாளங்கள் கெட்டுவிடும் என்பதை நீங்கள் ஒவ்வொருவரும் மறந்துவிடக்கூடாது.

ஒரு மொழியை அடுத்த தலைமுறைக்கு எளிமையாகப் பாமரருக்கும், பண்டிதருக்கும் எடுத்துச் செல்லக் கூடிய கருவியாகப் பட்டிமன்றம் காணப்படுகின்றது" - என்றார். (அ-ம-66)

## 500 கடல்மைல்...

பருத்தித்துறை துறைமுகத்திலிருந்து கடந்த ஏழாம் திகதி புறப்பட்ட மீனவர்களையே காணவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. வல்வெட்டித்துறை, கல்முனை, திருகோணமலை மற்றும் முள்ளியானைச் சேர்ந்த மேற்படி நான்கு மீனவர்களும், புறப்பட்ட தினத்திலிருந்து ஒரு வாரத்துக்குள் கரைதிரும்பியிருக்க வேண்டும். ஆனால், அவர்கள் இன்னமும் கரைதிரும்பவில்லை. இது தொடர்பில் பொலிஸாரிடம் முறையிடப்பட்ட நிலையில், நேற்றையதினம் தீவிரமான தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டன. கரையிலிருந்து 500 கடல்மைல் அளவுக்கு தேடுதல்கள் நடத்தப்பட்டதாகவும் எனினும் மீனவர்களைக் காணவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விடயம் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ள நிலையில், மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் மீனவர்களிடம் தெரிவித்துள்ளார். (அ-ம)

## தமிழ்ப்...

கடந்த காலங்களில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களில் தேசியக் கட்சியின் வேட்பாளர்களையும் பெரும்பான்மை [illegible]ன சிங்கள வேட்பாளர்களையும் ஆத[illegible]து எந்தப் பயனும் இல்லை என்பதால், இம்முறை தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒருவரை நியமிப்பது என்று தமிழ்த் தேசியப் பரப்பில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

தமிழர்களின் அபிலாஷைகளை வெளிப்படுத்துவதற்கும், சிங்களத்தேசியக் கட்சிகளின் வேட்பாளர்களைத் தமிழர்கள் இனியும் நம்பத் தயாரில்லை என்ற செய்தியைப் பறைசாற்றுவதற்கும் மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கைகளுக்கு பல்வேறு அமைப்புகளும் பல்வேறு கட்சிகளும் ஆதரவு வழங்கியுள்ளன. இதன் அடுத்தகட்ட நகர்வாகவே அரசியல் கட்சிகளுக்கும் சிவில் சமூகத்துக்கும் இடையில் நாளை ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்படவுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தனின் இல்லத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடல்களின் அடிப்படையிலேயே, நாளை தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கும், சிவில் சமூக அமைப்புகளுக்கும் இடையில் செல்வா கலையரங்கில் வைத்து ஒப்பந்தம் மேற்கொள்வதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர், பொது வேட்பாளர் தெரிவு உள்ளிட்ட ஏனைய அனைத்து விடயங்கள் தொடர்பிலும் அடுத்தகட்ட நடவடிக்கைகள் மிகத் தீவிரமாக முன்னெடுக்கப்படும் என்றும் தெரியவருகின்றது. (அ-ம-20-26)

## ஜனாதிபதித்...

வரும், நாடாளுமன்ற உறுப்பினருமான க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்தில் நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"ஜனாதிபதித் தேர்தலைப் பொறுத்தவரை வேட்பாளர் எவரும் 50 வீதத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற முடியாத நிலைமை காணப்படுகிறது. அதனால் அவர்கள் சிறுபான்மையின மக்களின் வாக்குகளைப் பெற முனைப்புக் காட்டுவார்கள். அதேநேரம் ஜனாதிபதித் தேர்தலில் எவரும் 50 வீதத்துக்கும் அதிகமான வாக்குகளை பெறாத நிலைமை ஏற்படும்போது நாட்டில் அரசியல் உறுதித்தன்மை இல்லாமல் போகும்.

ஏற்கனவே நாட்டில் பொருளாதார நெருக்கடிகள் காணப்படுகின்றன. அரசியல் உறுதித்தன்மையும் நாட்டில் இல்லாது போனால் நாடு மிக மோசமான பொருளாதாரப் பின்னடைவுகளைச் சந்திக்கவே நேரிடும். அத்துடன் தேர்தலுக்காகப் பெருமளவான நிதிகள் செலவழிக்கப்பட வேண்டிய நிலைமையும் ஏற்படும். அதுவும் நாட்டின் பொருளாதாரத்தைப் பாதிக்கும். எனவே, அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து ஒருவருட காலத்துக்கு ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போடவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்க வேண்டும்" - என்றார். (அ-ம-20-66)

## நிமோனியாவால்...

யாழ்ப்பாணம் - வண்ணார்பண்ணையைச் சேர்ந்த, பிறந்து மூன்றரை மாதங்களேயான சிவதாசன் றக்ஸ்மி எனும் சிசுவே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

நேற்றுக்காலை 6 மணியளவில் பால் குடித்த குழந்தை பின்னர் மயக்கமடைந்துள்ளது. இதையடுத்து யாழ்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டபோது அந்தக் குழந்தை உயிரிழந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

நிமோனியாவே இறப்புக்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இறப்பு விசாரணைகளையாழ்ப்பாணம்போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

**வீடு வாடகைக்கு**

யாழ் இந்து ஆரம்ப பாடசாலைக்கு மிக அண்மையாக புதிதாக கட்டப்பட்ட பெரிய கோல் வசதியுடன் கூடிய வீடு வாடகைக்கு விடப்படும். (நிறுவனங்கள் மட்டும் விரும்பத்தக்கது)

தொடர்புகளுக்கு:
**077 016 1864**

**கடை வாடகைக்கு உண்டு**

கல்வியங்காடு பிரதான வீதியில் கடை வாடகைக்கு உண்டு.

தொடர்பு :**077 1750 746**
**077 8069 790**

**காணி விற்பனைக்கு**

மருதனார்மடம் உரும்பிராய் வீதி
1 3/4 பரப்பு, 2 பரப்பு.
திருநெல்வேலி - நாவலடி வீதி
பரப்பு 1 குளி 5.22

(CS 978) V-1

**077 104 8865**

**காணி, வீடு விற்பனைக்கு**

கோண்டாவில் பகுதியில் 3 பரப்புக் காணியும், 3 1/2 பரப்பிலமைந்த 5 அறைகள் கொண்ட வீடும் விற்பனைக்கு உண்டு.

**077 703 7058, 077 60 111 35**

**வேலையாட்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் மென்பான விநியோக நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.

1. கணக்காளர், உதவிக்கணக்காளர் (பெண்).
   தகைமை: A/L வர்த்தகம்
   Ms Office
   Qick Book
2. களஞ்சிய காப்பாளர் - (ஆண்)
   (யாழ் மாநகரசபைக்குள் விரும்பத்தக்கது)

தொடர்பு:
**076 561 5492, 070 511 5335**

**காணி விற்பனைக்கு**

**யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் 42 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

**நிலப்பரப்பு**

- **A32 பிரதான வீதியில் இருந்து 50 மீற்றர் தூரத்தில் 2 வது காணி.**
- **20 அடிப்பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.**
- **குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.**
- **நன்னீர் ஊற்று சூழல், கட்டுக்கிணறு உள்ளது.**
- **ஒரு பரப்பின் விலை 5 1/2 இலட்சம் (550000/=)**
- **தரகர் தேவையில்லை**

**பார்வையிடும் நேரம்:**
**காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை.**

(CS 977) V-1

**தொடர்புகளுக்கு:**
**ஜெயம் 077 814 7389**
**077 986 5457**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைத் தேவை

மானிப்பாய் அல்லது
கொக்குவில் பகுதியில் ஒரு
மாத காலத்திற்கு வீடு
வாடகைக்குத்தேவை.

தொடர்பு:- 077 308 7172

(CS/8611)N-1

## வேலையாள்கள் தேவை

பாரவூர்தி சாரதிகள் உடன் தேவை.
(கொழும்பு, யாழ்ப்பாணம் 5 வருட அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.)
நேரில் சமுகம்தரவேண்டிய முகவரி:
195, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(195, Temple Road, Nallur, Jaffna)

தொடர்புகளுக்கு:
0772514984, 077 8729 806

## காணி, வீடு விற்பனைக்கு உண்டு

கோப்பாய் தெற்கு கிராம சபை
ஒழுங்கையில் கிராம சேவையாளர்
பிரிவு J/260 நில.பர.3 குளி 8.50
அளவுள்ள காணியும்
வீடும் விற்பனைக்கு உண்டு

077 9672 152
077 9024 248

## கனடாவில் உயர்கல்வி

குறைந்த கட்டணத்தில்
இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி

**STUDY IN UK & WORK VISA**

ஆங்கில பயிற்சியுடன் கூடிய வெளிநாட்டு
உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு

வெற்றிகரமான 13 வருட சேவையில்

**WEC COLLEGE**

புதிய உயர்கல்லூரி வளாகம்
ஆரியகுளம்,யாழ்ப்பாணம்
0779265447/0776421264
0212050988,0217200989
கிளை: சங்கத்தானை,சாவகச்சேரி

## வாடகைக்கு

நாவலர் வீதியில் வீட்டின் பகுதி வாடகைக்கு உண்டு. தனி அறை, குளியலறை, சமையலறை, திறந்த விறாந்தை பெண்களுக்கு மட்டும் வழங்கப்படும். வாடகை 14000.00.

T.P. 0710316312

## வீடு வாடகைக்கு உண்டு

தாவடி சந்திக்கருகாமையில்
மாபிள் பதித்த வீடு வாடகைக்கு
உண்டு.

தொடர்பு :076 5704 141

## பராமரிப்பாளர் தேவை

வயோதிபர் ஒருவரை
தங்கிநின்று பராமரிப்பதற்கு
பராமரிப்பாளர் தேவை.

தொடர்புகளுக்கு:
076 8712 788
00491590248133 3

## மணமகள் தேவை

யாழ். இந்து (V) குடும்பத்தைச் சேர்ந்த 1986 இல் பிறந்த 7 இல் செவ்வாய் உள்ள அனுஷ நட்சத்திரம் கி.பாவம் 50 உடைய சொந்த வாகனம், சொந்த வியாபாரம் சொத்துள்ள மகனுக்கு சீதனம் எதிர்பார்க்கப்பட மாட்டாது. தொடர்புகளுக்கு:-

077 9865 957

## மணிக்கூடுகள் விலைக்கு வாங்கப்படும்


ROLEX, Omega மற்றும்
பழைய கால மணிக்கூடுகள்
வாங்கப்படும்.
மரத்தினாலான Clock களும்

0766 977 346

யாழ். மத்திய பஸ் நிலையம்
அருகில்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
19 . 07 . 1938



மறைவு
01 . 08 . 2023

அச்சுவேலியை பிறப்பிடமாகவும் சுன்னாகம், கொழும்பை
வதிவிடமாகவும் கொண்ட

### அமரர் இளையதம்பி சிவயோகநாதன்

Retired Deputy General Manager (C.W.E)

**நினைவு தினம் : 21.07.2024**

ஆண்டு ஒன்று போனாலும் ஆறவில்லை உங்கள் நினைவுகள்
அன்போடும், பண்போடும், நட்போடும்
எங்களுடன் எப்போதும் இருந்தீர்கள் பப்பா.

எங்களுக்கு வார்த்தைகள் இல்லை
உங்கள் இழப்பை சொல்வதற்கு
உங்களை நினைக்கும் போது
ஆறுதல் சொல்ல வருவது கண்ணீர் மட்டும்தான்
என்றும் உங்களுக்கு கண்ணீர் பூக்களையே
ஆத்ம சாந்திக்காக சமர்ப்பிக்கின்றோம்.

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

உங்கள் நினைவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
சகோதரன், மைத்துனிமார்
மருமகன்கள், மருமகள்கள்,
பெறாமக்கள், பேரப்பிள்ளைகள்.
மற்றும் உறவினர்கள்

## SPOKEN ENGLISH & GRAMMAR

யாழ் இந்துக்கல்லூரி வீதியில்
GRADE 7 to GCE - O/L,
Advanced Level, பட்டதாரிகள்,
தொழில் புரிவோர் ஆகியவர்களுக்கு
English Speaking Practice
in the class itself.

K.Ganesh B.A Pera 077 766 8725

(CR/42847) J-1

## அண்ணா

விரைவுப் பொதிகள்
விரைவு - நம்பிக்கை - பாதுகாப்பு
நியாயமான கட்டணத்தில் துரித சேவை
விரைவு நம்பிக்கை பாதுகாப்பு
076 303 5011
076 122 1566
075 330 5500
070 330 5500

## காணி விற்பனைக்கு

புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அருகாமையில்
தபாற்கந்தோர் வீதியில் 200m தொலைவில்
12 பரப்புக் காணியும், ஆவரங்கால்
10 ஆம் கட்டை வங்கி வீதியில் 400m
தொலைவில் 10 பரப்பு செம்மண் தோட்டமும்
விற்பனைக்குண்டு.

தொடர்பு: 076 701 8181

(cs.55710) (N-1)

## பெண் உதவியாளர் தேவை

றோயல் பல்சிகிச்சை நிலையத்திற்கு
பெண் உதவியாளர் தேவை.

தொடர்புகளுக்கு:
076 8788 148, 074 1551 427

## நீர்க்கசிவை தடுப்பதற்கு

உங்கள் கட்டடங்களில் மழைக்காலங்களில் ஏற்படும் நீர்க்கசிவை
10 வருட உத்தரவாதத்துடன் நிறுத்தித் தருகின்றோம்.
Finexஸ்தாபனத்தாரின் ஏகவிநியோகஸ்தர்களிடம் இருந்தும்
உலகத்தரமிக்க **இரசாயனப் பொருட்களை** விலைக்கழிவுடன்
பெற்றுக்கொள்ளலாம்.

**போலிகளைக்கண்டு ஏமாறாதீர்கள்**

தற்போது கொழும்பில் தெகிவளையிலும்

வடமாகாணத்தில் முதன்முறையாக அறிமுகப்படுத்தியவர்கள்
15 வருட அனுபவமுள்ளவர்கள்

North and East Engineering
55 Stanly Road, Jaffna, Srilanka.
021 222 2363, 077 524 4177, 077 232 3000
www.northandeastengineering.com

FINEX

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள சுற்றுலா விடுதி ஒன்றிற்கு கீழ் வரும் பணியாளர்கள் உடன் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

1) சமையல் உதவியாளர் : (வயது எல்லை : 20-50)
2) தோட்டப் பராமரிப்பாளர் : இத்துறை சார்ந்த அனுபவம் விரும்பத்தக்கது. (வயது எல்லை : 20-50)
3) துப்புரவுப் பணியாளர் : (வயது எல்லை : 20-50)

நேரில் சமுகம்தரவேண்டிய முகவரி:
195, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(195, Temple Road, Nallur, Jaffna)

தொடர்புகளுக்கு: 0772514984, 0778729806

## முழுநேர / பகுதிநேர வேலைவாய்ப்பு

**இலங்கை காப்புறுதிக்
கூட்டுத்தாபனத்துக்கு ஆலோசகர்
பதவிக்கான விண்ணப்பங்கள்
கோரப்படுகின்றன.**

**அடிப்படைத் தகைமைகள்**

- ✓ **G.C.E (O/L) பரீட்சையில் கணிதம், தமிழ் உட்பட 6 பாடங்களில் சித்தி.**
- ✓ **18 - 60 வயதுக்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.**

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக
சுயவிபரக்கோவையை (BIO DATA) கீழ்வரும்
Whatsapp இலக்கத்துக்கு அல்லது மின்னஞ்சல்
முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

Whats: app 077 756 3781
jenyjude77@yahoo.com

(CS/55683) J-1

22 ஆவது...

வொரு திட்டமும் அரசிடம் இல்லை. அரசமைப்பின் 19ஆவது திருத்தம் நிறைவேற்றப்படும் போது ஒரு வழு விடப்பட்டுள்ளது. அந்த வழுதான் திருத்தப்படுகின்றது. அது தேர்தலில் தாக்கம் செலுத்தாது. ஏனெனில் ஜனாதிபதியின் பதவிக்காலம் ஐந்தாண்டுகள் தான் என உயர்நீதிமன்றம் தெளிவாகக் கூறியுள்ளது. அடுத்துவரும் நாட்களில் ஜனாதிபதித் தேர்தலுக்கு நாள் நிர்ணயிக்கப்படும். தேர்தல் ஆணைக்குழு இதற்குரிய நடவடிக்கையை எடுக்கும். ஜனாதிபதித் தேர்தலில் 22ஆவது திருத்தம் தாக்கம் செலுத்தாது என்பதால் தான் அது வர்த்தமானியில் வெளியாகியுள்ளது" - என்றார். (அ-ம-44)

பரீட்சைக்குச்...

செல்ல மறுத்தமையால் தாயார் விரக்தியடைந்து தனது உயிரை மாய்க்க முயன்றுள்ளார். இதன்போது அவர் காப்பாற்றப்பட்டு தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். எனினும் நேற்றுமுன்தினம் அவர் சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார். இறப்புத் தொடர்பான மேலதிக விசாரணைகளை இளவாலைப் பொலிஸாரும், மரண விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கமும் மேற்கொண்டனர். (அ-ம-66-27-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.07. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள் : 04

# சஞ்சீவி

Registered as a Newspaper

மலை : 33 | வள்ளுவர் ஆண்டு : 2055 | ஆடி : 5 | ஞாயிற்றுக்கிழமை (21.07.2024) | சிகரம் :211

நஞ்சு உடைமை தான் அறிந்து நாகம் கரந்து உறையும்
அஞ்சாப் புறம் கிடக்கும் நீர்ப் பாம்பு- நெஞ்சில்
கரவுடையார் தம்மைக் கரப்பர் கரவார்
கரவிலா நெஞ்சத் தவர்.

- ஔவை

# அர்ச்சுனாவும் இரும்பு + மோதிரமும்

நிலாந்தன்

ஒரு கனேடிய நண்பர், அவர் ஒரு பொறியியலாளர், இரும்பு மோதிரம் ஒன்றை அணிந்திருந்தார். அதற்குப் பின்னால் உள்ள கதையைச் சொன்னார். கனடாவில், கியூபெக் பாலம் 1907ஆம் ஆண்டு மனிதத் தவறுகளால் நொருங்கி விழுந்தது. அதில் 75 தொழிலாளர்கள் கொல்லப்பட்டார்கள். அப்படி ஒரு தவறு இனிமேலும் நடக்கக்கூடாது என்ற சங்கல்பத்தோடு பொறியியலாளர்களுக்கான சத்தியப்பிரமாணம் ஒன்றைக் குறித்துச் சிந்திக்கப்பட்டது. டொரன்டோ பல்கலைக்கழகத்தின் பேராசிரியரான பொறியியலாளர் ஹேல்டேய்ன்(Haultain) 1922 ஆம் ஆண்டு பொறியியலாளர்களுக்கான தொழில்சார் சத்தியப்பிரமாணத்தை அறிமுகப்படுத்தினார். 1925ஆம் ஆண்டு அவருடைய மேற்பார்வையின் கீழ் பொறியல் பட்டதாரிகள் இரும்பு மோதிரம் அணிந்து சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்கள். முதலாவது தொகுதி இரும்பு மோதிரங்கள் உடைந்து விழுந்த கியூபெக் பாலத்தின் இரும்புத் தூண்களில் இருந்து தயாரிக்கப்பட்டன. இது கனேடியப் பொறியியலாளர்களுக்கான பொறுப்புக்கூறல் சம்பந்தப்பட்ட ஒரு விடயம். மருத்துவர்களுக்கும் அவ்வாறு உலகளாவிய 'ஹிப்போகிரடிஸ் சத்தியப்பிரமாணம்' என்று அழைக்கப்படும் சத்தியப்பிரமாணம் உண்டு.

பொறுப்புக்கூறல் எனப்படுவது மருத்துவத் துறைக்கும் பொறியியல் துறைக்கும் மட்டுமல்ல எல்லாத் துறைகளுக்கும் பொருந்தும். ஒரு சமூகப் பிராணியாக இருக்கும் மனிதர்கள் அனைவருக்கும் அது பொருந்தும். மருத்துவர் தவறுவிட்டால் உயிர் போகும் உறுப்புகள் போகும். பொறியியலாளர் தவறுவிட்டால் பாலம் இடிந்து விழும்; அல்லது கட்டடம் இடிந்து விழும்; உயிர் போகும்; உறுப்புகள் போகும்; சொத்துகள் போகும். ஆசிரியர் தவறுவிட்டால் ஒரு தலைமுறையின் எதிர்காலம் நாசமாகும். தலைவர்கள் தவறு விட்டால் ஒரு நாடு அழிந்து போகும். எனவே மனிதத் தவறுகளுக்கு மனிதர்கள் பொறுப்புக் கூறவேண்டும்.

சமூகத்தின் மிகச்சிறிய அலகாகிய குடும்பத்துக்குள் குடும்ப அங்கத்தவர்களுக்கு பொறுப்புக்கூறவேண்டும். நிறுவனங்களுக்குள் கட்டமைப்பு சார்ந்து, தொழில் தர்மம் சார்ந்து, பதவிவழி சார்ந்து, பொறுப்புக் கூறவேண்டும். தலைவர்கள் மக்களுக்குப் பொறுப்புக்கூறவேண்டும். ஆகக் குறைந்தது எல்லா மனிதர்களும் தங்களுடைய மனச்சாட்சிக்காவது பொறுப்புக் கூறவேண்டும்.

மருத்துவர் அர்ச்சுனா மருத்துவத்துறை சார்ந்த பொறுப்புக்கூறல் தொடர்பில் விழிப்பை அதிகப்படுத்தியுள்ளார். மருத்துவத்துறை சார்ந்தவர்கள் சமூகத்துக்கு பொறுப்புக்கூற வேண்டிய நிர்ப்பந்தங்களை அவர் அதிகப்படுத்தியுள்ளார். அவர் எப்பொழுதும் நேரலையில் தோன்றினார். அப்பாவித்தனமாகவும் வெகுளித்தனமாகவும் தனக்குச் சரியெனப்பட்டதை நேரலையில் கூறினார். அவரிடம் உள்ள அப்பாவித்தனமும் தன்னைத் தற்காத்துக் கொள்ளாத துணிச்சலும் கலகக் குணமும் அவரை மக்களுக்கு நெருக்கமானவர் ஆக்கின.

அதேசமயம் அந்த அப்பாவித்தனமும் அவசரமும் நிதானமின்மையும் பக்குவமின்மையும் ஊடகங்கள் முன் அவரை சிலசமயம் பலவீனமானவராகவும் காட்டின. சுகாதாரத்துறை தொடர்பாக அவர் முன்வைக்கும் குற்றச்சாட்டுகளை வேறு பலரும் ஏற்கனவே முன்வைத்திருக்கிறார்கள். ஆனால் அர்ச்சுனா இதில் எங்கே வேறுபடுகிறார் என்றால், அவர் அந்த 'சிஸ்டத்துக்குள்' இருந்துகொண்டே அந்த 'சிஸ்டத்தைக்' கேள்வி கேட்கின்றார் என்பதுதான். அதுதான் அவருக்கு கிடைத்த கவர்ச்சி.

அந்தக் கவர்ச்சியை அவர் தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்வாரா இல்லையா; அவருடைய தனிப்பட்ட வாழ்க்கை எத்தகையது; அவருடைய தனிப்பட்ட சுபாவம் எத்தகையது… போன்ற எல்லா விடயங்களுக்கும் அப்பால், அவர் எழுப்பியிருக்கும் கேள்விகளுக்கு துறைசார் உயர் அதிகாரிகள் பதில் கூறுவதே பொருத்தமானது. ஏனெனில் அர்ச்சுனா மருத்துவத்துறை சார்ந்த பொறுப்புக்கூறல் தொடர்பில் விழிப்பை ஏற்படுத்தியிருக்கிறார். மருத்துவத்துறைக்கு அது தொடர்பில் நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தியிருக்கிறார்.

தமிழ்ச் சமூகத்தில் கிராமவாசிகள் அரச மருத்துவமனைகளை 'தர்மாஸ்பத்திரிகள்' என்று அழைப்பார்கள். அங்கு மருந்தும் சிகிச்சையும் இலவசமாக தரப்படுகிறது என்று பொருள். ஆனால் அவை மெய்யான பொருளில் தர்மாஸ்பத்திரிகள் அல்ல. அங்கே வேலை செய்யும் மருத்துவர்கள் உட்பட அனைவரும் சம்பளம் வாங்குகிறார்கள். அந்தச் சம்பளம் மக்கள் செலுத்தும் வரிப்பணத்தில் இருந்து திரட்டப்படுவது. அங்கு வழங்கப்படும் இலவச மருந்தும் சிகிச்சையும்கூட மக்களுடைய வரிப் பணம்தான். எனவே அங்கே யாரும் யாருக்கும் தானம் செய்யவில்லை. யாரும் யாரிடமும் தானம் பெறவும் இல்லை.

ஆனால் வாங்கும் சம்பளத்துக்கு மேலதிகமாக தமது தொழிலைத் தொண்டாகச் செய்யும் மருத்துவர்கள் அநேகர் உண்டு. தாம் பொறுப்பேற்ற நோயாளியை காப்பாற்றுவதற்காக ஊன் உறக்கமின்றி சேவை புரியும் மருத்துவர்களும் உண்டு. தனியார் மருத்துவமனைக்குப் போகக்கூடாது என்பதனை ஒரு தவம் போல கடைப்பிடிக்கும் மருத்துவர்களும் உண்டு. தனியார் மருத்துவத் துறைக்கு போனாலும் அங்கே நோயாளியின் நிதிநிலையைக் கருத்தில் எடுத்து காசு வாங்காத மருத்துவர்களும் உண்டு. வாங்கிய காசை உண்டியலில் சேகரித்து தானம் செய்யும் மருத்துவர்களும் உண்டு. எனவே அர்ச்சுனா முன்வைக்கும் குற்றச்சாட்டுகள் எல்லாம் மருத்துவர்களுக்கும் பொருந்தாது. போர்க்காலத்தில் உயிரைக் கொடுத்து உழைத்த மருத்துவர்களுக்கும் அது பொருந்தாது. பெருந்தொற்றுநோய் காலத்தில் உயிரைக் கொடுத்து உழைத்த மருத்துவர்களுக்கும் அது பொருந்தாது. இப்பொழுதும் தொழிலைத் தொண்டாகச் செய்யும் மருத்துவர்களுக்கும் அது பொருந்தாது.

அரச மருத்துவமனையை தர்மாஸ்பத்திரியாக பார்க்கும் மக்கள் அங்கு மருத்துவர்களும், தாதியர்களும் தாங்கள் எதிர்பார்க்கும் அளவுக்கு தர்மமாக இல்லை எனும் பொழுது அதிருப்தி அடைகிறார்கள், கோபமடைகிறார்கள். குறிப்பாக தனியார் மருத்துவத்துறை மீதான விமர்சனங்கள் அந்தக் கோபத்தை அதிகப்படுத்துகின்றன. அந்தக் கோபங்களை - கேள்விகளை - அதிருப்தியை அர்ச்சுனா குவிமயப்படுத்தினார். அதனால்தான் சாவகச்சேரியில் அத்தனை மக்கள் திரண்டார்கள். சில நாட்களுக்கு முன் சம்பந்தரின் அஞ்சலி நிகழ்வில் திரண்டதைவிட அதிக தொகையினர் ஒரே நேரத்தில் திரண்டார்கள்.

அர்ச்சுனா எப்பொழுதும் நேரலையில் தோன்றினார். அதுதான் அவருடைய பலம். பின்னர் அதுவே அவருக்கு பலவீனமாகவும் மாறியது. அரச மருத்துவமனைகளை தர்மாஸ்பத்திரிகளாக கருதும் ஒரு சமூகத்தின் மத்தியில் மருத்துவர்களுக்கு உயர்வான பவித்திரமான ஒரு இடம் உண்டு. பொதுவாக மருத்துவர்கள் அந்த பவித்திரமான ஸ்தானத்தை விட்டு வெளியே வர விரும்புவதில்லை. ஆனால் அர்ச்சுனா வெளியே வந்தார். இப்பொழுது முகநூலில் சில மருத்துவர்கள் அவ்வாறு வெளியே வருகிறார்கள். ஆனால் இவர்கள் அனைவரும் விதிவிலக்கு. பொதுவான மருத்துவர் குணம் என்பது தனக்குரிய பவித்திரமான ஸ்தானத்தைப் பேணுவதுதான்.


ஆனால் அர்ச்சுனா அப்படியல்ல. அவர் மருத்துவர்கள் தொடர்பாக தமிழ்ச் சமூகத்தில் கட்டியெழுப்பப்பட்ட பொதுவான பிம்பத்துக்கு வெளியே நிற்கிறார். நேரலைமூலம் அவர் சமூக வலைத்தளங்களில் கட்டியெழுப்பியிருக்கும் பிம்பமும் திடீர் வீக்கமாக இருக்கலாம். அவர் தன்னுடைய தனிப்பட்ட தவறுகளை, பலவீனங்களை 'சிஸ்டத்தின்' மீதான விமர்சனங்களாக மாற்றுவதில் வெற்றி கண்டு விட்டார் என்ற ஒரு விமர்சனமும் உண்டு.


04






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







○ கே.வி.தவராசா

(சென்றவாரத் தொடர்ச்சி)

# கோத்தாபய மீது கொலைமுயற்சி; வித்தியாசமான விசாரணைகள்

### நடமாடும் சுதந்திரத்தை பொலிஸார் தடைசெய்யக்கூடாது

இரண்டு பக்க வாதங்களையும் மிகக் கவனமாகச் செவிமடுத்த நீதியரசர்கள் குழாமில் தலைமை வகித்த பிரதம நீதியரசர் , பொலிஸார் குற்றச்சாட்டுக்களை உருவாக்கும் தொழிற்சாலைகளாகச் செயற்படக் கூடாதெனவும் நிரூபிக்கப்படக்கூடிய அவசியமான சான்றுகள் காணப்படுமிடத்து மட்டுமே தனிமனித சுதந்திரத்தை பாதிக்கக்கூடிய தடுப்புக் காவல் உத்தரவை பெற வேண்டுமெனவும் கடுமையாக எச்சரித்தார்.

மனுதாரர் ஏற்கனவே பிணையில் விடப்பட்டுள்ளதால், அவரை மீண்டும் கைது செய்யக்கூடாதென்பதுடன் மனுதாரரின் நடமாடும் சுதந்திரத்தை பொலிஸார் தடை செய்யக்கூடாது எனவும் நீதியரசர்களினால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதனையடுத்து பாதுகாப்புச் செயலாளினால் வழங்கப்பட்ட இரண்டாவது தடுப்புக்காவல் உத்தரவு நடைமுறைப்படுத்தப்படமாட்டாது என அரச சட்டத்தரணி உத்தரவாதம் ஒன்றையும் உயர்நீதிமன்றுக்கு வழங்கினார்.

இதில் முக்கியமான விடயம் யாதெனில் இரண்டாம் முறை ரவிக்குமாருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட தடுப்புக் காவல் உத்தரவு எங்களுக்குத் தெரியாமலோ அல்லது நாம் அறியாமலோ அல்லது எங்கள் கவனத்துக்கு கொண்டுவரப்படாமல் இருந்திருந்தால் ரவிக்குமார் மீண்டும் எந்த அறிவித்தலும் இன்றி இரவோடு இரவாக பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருப்பார். வழக்கு விசாரணை தொடர்ந்து கொண்டிருந்தது . மற்றைய ஆறு சந்தேக நபர்களும் வெலிக்கடைச் சிறைச்சாலையிலிருந்து ஒவ்வொரு தவணையிலும் நீதிமன்றம் அழைத்துவரப்படுவர். ரவிக்குமாரும் ஒவ்வொரு தவணைகளிலும் நீதிமன்றில் தவறாது ஆஜராகிக் கொண்டிருக்கையில், உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அவ் வேளையில் சட்டமா அதிபர் சார்பில் ஆஜராகிய சிரேஷ்ட அரச சட்டத்தரணி, மனுதாரருக்கு எதிரான விசாரணை ஆறு பொலிஸ்நிலையங்களை சேர்ந்த பொலிஸாரினால் நடத்தப்பட்டதாகவும், ஆனால் மனுதாரருக்கு எதிராக எந்தச் சான்றும் இல்லாததனால் மனுதாரரை விடுதலை செய்யத் தீர்மானிக் கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார். மனுதாரரை விடுதலை செய்வதற்கான பணிப்புரையை பிரதம நீதவான் நீதிமன்றுக்கு அனுப்பவுள்ளதாகவும் நீதியரசர்களுக்கு அறி வித்தார்.

### 8 ஆம் இலக்கம் துரதிர்ஷ்டமா?

ஒவ்வொருநாளும் தன்னை விடுதலை செய்வதற்கான அறிவுறுத்தல் பிரதான நீதவான் நீதிமன்றுக்கு எப்பொழுது வரும் என ரவிக்குமார் ஆவலோடு காத்திருந்தார். 8 ஆம் இலக்கம் தனக்கு பிரச்சினை தரக்கூடியது என்று எண்கணிதத்தில் நம்பிக்கை கொண்டிருந்தவர் ரவிக்குமார். அதற்கேற்றாற்போல அவர் கைது செய்யப்பட்டதும் 8ஆம் திகதி தான். அதனால் 8,17,26 ஆம் திகதிகளில் அவர் மிகவும் மனமுடைந்து காணப்படுவார். 2011ஆம் ஆண்டு ஜூலை மாதம் 6 ஆம் திகதிவரை சட்டமாஅதிபர் திணைக்களத்திலிருந்து எந்த அறிவுறுத்தலும் பிரதான நீதவான் நீதிமன்றத்தின் பதிவாளருக்கு கிடைக்கப்பெறாத காரணத்தினால் தனக்கு விடுதலை கிடைக்கும் என்ற நம்பிக்கையையிழந்து மனமுடைந்து போயிருந்தார் ரவிக்குமார். அவ்வேளையில் ஜூலை மாதம் 7ஆம் திகதி சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து ரவிக்குமாரை விடுதலை செய்வதற்கான அறிவுறுத்தல் நீதவான் நீதிமன்றப் பதிவாளருக்கு கிடைக்கப் பெற்றிருந்தது. எந்த 8 ஆம் இலக்கம் தனக்கு துரதிர்ஷ்டம் என ரவிக்குமார் கருதினாரோ, அதே 08ஆம் திகதி அவர் விடுதலை செய்யப்பட்டார்.




### கடவுச்சீட்டு கையளிப்பு

ரவிக்குமார் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீண்டும் 2011ஆம் ஆண்டு ஜூலை மாதம் 8ஆம் திகதி உயர் நீதிமன்றில் அழைக்கப்படவிருந்த நிலையில் அன்றைய தினமே பிரதான நீதவான் நீதிமன்றில் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, சட்டமா அதிபரினால் அனுப்பப்பட்ட விடுதலை செய்வதற்கான சட்டமாஅதிபரின் சம்மதத்துக்கு அமைய பிரதான நீதிமன்ற நீதவான் ரவிக்குமாரை வழக்கிலிருந்து விடுதலை செய்தார்.

பிணை நிபந்தனையின் நீதிமன்றக் கட்டுப்பாட்டிலிருந்த கடவுச் சீட்டையும் அன்றைய தினமே ரவிக்குமாரிடம் ஒப்படைக்கும்படியும், நாட்டைவிட்டு வெளியேறக்கூடாதென அவருக்கு விதிக்கப்பட்ட தடையையும் நீக்குவதோடு, அந்த உத்தரவையும் அதன் பிரதியையும் உடனடியாக விமானநிலையக் குடிவரவு குடியகல்வு அதிகாரிகளுக்கும் அறிவுறுத்தும் படியும் பிரதான நீதவான் நீதிமன்றத்தை நான் வேண்டிக் கொண்டேன்.

நீதிமன்ற உத்தரவுக்கு அமைய நீதிமன்ற பதிவாளரினால் அன்றைய தினமே கடவுச்சீட்டு ரவிக்குமாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

### மீண்டும் கைதா?

உயர்நீதிமன்றில் ரவிக்குமார் சார்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை மனித உரிமை மீறல் மனு மீண்டும் 2011ஆம் ஆண்டு ஜூலை மாதம் 8ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்பட்ட பொழுது இந்த மனுவின் பிரதிவாதியான சட்டமா அதிபர் சார்பில் ஆஜராகிய அரச சட்டத்தரணி ,

'பாதுகாப்புச் செயலாளர் கொலை முயற்சியில் மனுதாரருக்கு எதிராக எந்தச்சான்றும் இல்லாத காரணத்தினால் மனுதாரரை அந்த வழக்கிலிருந்து விடுதலை செய்யும்படி பிரதான நீதவான் நீதிமன்றுக்கு அறிவித்திருப்பதாகவும் , ஆனால் குடிவரவு குடியகல்வுச் சட்டத்தின் கீழ் மனுதாரரான ரவிக்குமார் குற்றங்கள் புரிந்துள்ளார் எனவும் எனவே குறிப்பிடப்பட்ட குற்றங்களை விசாரணை செய்து வழக்குத்தாக்கல் செய்யவிருப்பதாகவும்' நீதியர சர்கள் குழாமுக்குத் தெரிவித்தார்.

2011ஆம் ஆண்டு ஜூலை மாதம் 8ஆம் திகதி உயர் நீதிமன்றில் மனுதாரரான ரவிக்குமார் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு அழைக்கப்படவிருந்த நிலையில் அன்றைய தினமே காலை நான் பிரதான நீதவான் நீதிமன்றில் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்து, ரவிக்குமார் விடுதலை செய்யப்பட்டவுடன் கடவுச்சீட்டை மீளப்பெற்றதனால் மீண்டும் கைது செய்யப்படுவதிலிருந்து தப்பித்துக் கொண்டார். பிரதான நீதவான் நீதிமன்றில் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யாமல் இருந்திருந்தால் கோத்தாபய கொலை முயற்சி வழக்கில் விடுதலை செய்யப்பட்ட ரவிக்குமார், குடிவரவு குடியகல்வு சட்டத்தின் கீழ் பொலிஸாரினால் மீண்டும் கைது செய்யப்பட்டிருப்பார். ரவிக்குமார் நொடியேனும் தாமதிக்காமல் நாட்டை விட்டு உடனடியாக வெளியேறுவதொன்றே தீர்வாகத் தெரிந்தது. 2011 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 8ஆம் திகதி விடுதலையான ரவிக்குமார் அன்றைய தினமே என்னோடு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு வந்து, அன்றிரவே என்னோடு சிங்கப்பூர் சென்று ,சிங்கப்பூரிலிருந்து லண்டன் நோக்கி பயணமானார். அதன் பின்னர்தான் எனக்கும் கௌரிசங்கரிக்கும் நிம்மதிப் பெருமூச்சு விடக் கூடியதாகவிருந்தது.

### நிரபராதி தண்டிக்கப்படலாமா?

இலங்கைப் பாதுகாப்புச் செயலாளர் மீது மேற்கொள்ளப்பட்ட கொலைமுயற்சி பற்றிய செய்தி உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உள்ள ஊடங்கங்கள் தொலைக்காட்சிகள் மற்றும் இணையத்தளங்களிலும் முக்கியமான செய்தியாகக் காணப்பட்டது. பாதுகாப்புச் செயலாளர் மீது கொலை முயற்சி நடைபெற்றமை உள்நாட்டில் மட்டுமின்றி சர்வதேசரீதியாகவும் முக்கியமான செய்தியாகும். அப்படியான சூழ்நிலையில் இந்தக் கொலை முயற்சியில் ரவிக்குமாருக்கு ஏதாவது தொடர்போ அல்லது சம்பந்தமோ இருந்திருப்பின் சம்பவத்தின் பின்னர் சில சந்தேக நபர்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட பின்னரும், தான் கைது செய்யப்படும் வரையும் பிரித்தானிய கடவுச்சீட்டை வைத்திருந்த அவர் இலங்கையில் தொடர்ந்து தங்கி இருப்பாரா? என்ற கேள்வி எழுகின்றது.

எந்தவிதக் குற்றமும் புரியாமல் 2008 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 9ஆம் திகதி தொடக்கம் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 6ஆம் திகதி வரை தடுப்புக்காவல் உத்தரவில் தடுப்பு முகாமிலும் வெலிகடைச் சிறைச்சாலையிலும் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் முடிவடைந்ததைத் தொடர்ந்து, மூன்று வருடங்களின் பின்னர் எந்தவிதமான குற்றமும் இல்லாத நிலையில் 2011ஆம் ஆண்டு ஜூலை மாதம் 08ஆம் திகதி ரவிக்குமார் விடுதலை செய்யப்பட்டார். தனது சொந்த மண்ணில் தனது வயதான நோய்வாய்ப்பட்ட தாயை பராமரித்துக் கொண்டு வர்த்தகத்தை செய்யும் நோக்கில் வந்து சேர்ந்த பிரித்தானியப் பிரஜையான ரவிக்குமார் செய்யாத குற்றத்துக்காக தண்டனை அனுபவித்தார்.

கைது செய்யப்பட்ட மற்றைய ஆறு சந்தேகநபர்களில் ஐந்து சந்தேக நபர்கள் எதிரிகளாக பெயர் குறிப்பிடப்பட்டு சட்டமா அதிபரினால் கொழும்பு மேல் நீதிமன்றில் 2013ம் ஆண்டு வழக்குத் தாக்கல் செய்யப்படட்து. இந்த வழக்கில் மூன்றாம், நான்காம் எதிரிகள் விடுதலை செய்யப்பட்டுவிட்டனர். மற்றைய எதிரிகளுக்கு எதிரான வழக்கு தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றது. சந்தர்ப்ப சூழ்நிலை ஒருவரை எப்படிச் சிக்கலில் மாட்டிவிடும் என்பதற்கு இந்த வழக்கு ஒரு நல்ல உதாரணமாகும்.

(அடுத்த வழக்கு அடுத்த வாரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துளி



விசும்பின் துளி வீழின் அல்லால்...

உலக மக்கள் தொகையில்
பாதுகாப்பான குடிநீரற்றோர்
2.2 பில்லியன்

பாதுகாப்பான சுகாதார
வசதியற்றோர்
3.5 பில்லியன்

நீர்த்துறையின்
உலகளாவிய
முதலீட்டுத்தேவை
$1.37ட்ரில்லியன்கள்

2030 இல்
நீர் பாதுகாப்பை
உறுதி செய்யத் தேவை
X 6 முதலீடு

அம்முதலீட்டின் நன்மைகள்

ஆரோக்கியமான
சூழலும் மக்களும்

காலநிலையை
தாக்குப்பிடிக்கும்
விவசாயம்

மேம்பட்ட
நீர்த்தேக்கம்

முதலீடு செய்யாவிட்டால்...

உலகளாவிய, தேசிய,
பிராந்திய, உள்ளூர்
முரண்பாடுகள் உருவாகும்!

மூலம்: உலக வங்கி

## அறைகூவல்!

தலைப்பு :-
'வடக்கின் நீர்ப் பாதுகாப்பு தொடர்பில் முகாமைத்துவ, வணிகத்துறை ஆய்வாளர்களின் பங்கு'

வழி நடத்துபவர் :-
பேராசிரியர் சிவானி சண்முகதாஸ்

நேரம் : 7.30 p.m.
திகதி : 01.08.2024 (வியாழன்)

Zoom அடையாளம் : 826 78424345
கடவுச்சொல் : 951401

எங்களுடன் இணைந்து உங்கள் கருத்துக்களையும் பகிருங்கள். இணைப்பை அணுக கைத்தொலைபேசியால் மின்வருடவும்!

# புலமையாளர் பதில்

**கேள்வி:** கிராமக்குளங்கள், பிற நீர்நிலைகள் பாதுகாக்கப்பட வேண்டியமைக்கான அவசியத்தை தெளிவுபடுத்த முடியுமா ?

**(S.ராகவன், கொக்குவில்)**

கிராமங்கள் தோறும் குளங்கள் பரவலாகக் காணப்பட்ட ஒரு காலம் உண்டு. வயல் சார் நிலங்களில் இருக்கும் குளங்கள், மற்றும் துரவு, கேணி, வாய்க்கால்களும் அக் காலத்தில் ஊர் மக்களாலேயே மிகுந்த அக்கறையோடு பராமரித்துப் பாதுகாக்கப்பட்டும் வந்திருக்கின்றன.

கிராமத்தில் கிடைக்கின்ற மழையானது வெள்ளமாக ஓடி இறுதியாக வந்தடையும் இடமாகவும், அந் நீரை ஊருக்குள் தேக்கி வைப்பதற்காகவும், தேங்கிய நீரைச் சுத்திகரித்து நிலத்தடியில் அமைந்துள்ள நிலத்தடிநீர்த் தேக்கங்களுக்கு ஊடுகடத்தி மீள்நிரப்பும் ஒரு அமைப்பாகவுமே குளங்கள் எமது மூதாதையினரால் உருவாக்கப் பட்டுள்ளன. ஆகவே கிராமத்தின் நீர்த் தேவை (குடிநீர், விவசாயம், கால்நடை மற்றும் பிற) எல்லாமே இக் குளங்கள் மற்றும் நீர்நிலைகள் மூலமே உறுதிப் படுத்தப்படுகிறது.

அம்மக்களின் கலாசாரமும் வாழ்வியலும் கூட நீர் நிலைகளை நிலைபேறான வகையில் பேணிப் பாதுகாப்பதாகவே அமைந்திருக்கின்றன. மக்கள் கூடும் இடங்களிலும் வழிபாட்டுக்குரிய ஆலயங்களிலும் கூட பொது நீர்நிலைகள் இருந்து வருகின்றன. கோயிலுடன் கூடிய தலம், தீர்த்தம், விருட்சம் எனும் ஒழுங்கமைப்பிலும் தீர்த்தம் என்பது குளம் மற்றும் கிராமிய நீர்நிலைகளைத் தான் குறிக்கிறது.


அப்படியாயின் இப் பொது வெளிகளில் அமைந்த கிராமக் குளங்கள் கேணிகள் சில இன்று ஏன் கவனிப்பின்றி அழிந்து போகின்றன என்பதும், ஏன் சில குளங்கள் இருந்த இடம் தெரியாமல் மூடப்பட்டு வருகின்றன என்பதும் இங்கு அவசியமான புதிய கேள்விகள் தான்.

எனவே இன்றைய, மற்றும் இனிவரும் தலைமுறைகளுக்காகவேனும் கிராமியக் குளங்கள், நீர் நிலைகளைத் தூர்வாரி, கட்டுகளை உயர்த்தி நல்ல நிலையில் பேணிப் பாதுகாப்பது எம் எல்லோரதும் பொதுப்பணியாக இங்கு முன் வைக்கப்படுகிறது.



**எந்திரி.சர்வானந்தன் சர்வராஜா**
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
நீர்ப்பாசனத் திணைக்களம்,
வடமாகாணம்.

# நீரைப்பெறுதல்: மலையகத்திலும் நெருக்கடியா?



பாதுகாப்பான நீர் கிடைக்காமையானது இலங்கையின் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் முக்கியமான தொரு பிரச்சினையாகக் காணப்படுவதாக ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் அண்மையில் அறிக்கையிட்டுள்ளது. அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆய்வின் படி தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுள் 43 சதவீதமானவர்களுக்கே நீருக்கான மேம்படுத்தப்பட்ட கிடைப்பனவு காணப்படுகிறது.

20 சதவீதமானவர்களுக்கு மலசல கூட வசதிகள் காணப்படவில்லை. ஆண்களை விட, களங்களில் நீண்ட நேரம் வேலை செய்யும் பெண்கள் இதனால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். தேயிலைத் தோட்டப் பிராந்தியங்களில் காணப்படும் இந் நீர்ப்பற்றாக் குறையை கால நிலை மாற்றம் மேலும் தீவிரமடையச் செய்கிறது. மோசமான வானிலையால் 27 சதவீதமான தொழிலாளர்கள் நீர்ப் பற்றாக்குறையை அனுபவிக்கின்றனர். அது மட்டுமன்றி பொருத்தமற்ற கழிவகற்றல் நடைமுறைகள் நீர் மூலங்களை மேலும் மாசுபடுத்துகின்றன.

தோட்டத்தொழிலாளர்களின் ஆரோக்கியத்தையும் வாழ்வாதாரத்தையும் பாதுகாக்கவேண்டுமாயின், நிலைபேறான நீர் முகாமைத்துவத்துவம், ஒப்புரவு மிகு வசதிகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட கழிவு முகாமைத்துவம் ஆகியவற்றை உரிய தரப்புகள் உறுதி செய்ய வேண்டும் என இவ்வறிக்கை பரிந்துரை செய்கிறது.

# கடந்த மாத அமர்வு : கொடுக்கல் வாங்கல்கள்!

பிரதேசம் கடந்து நீர் பெறுவதில் உள்ள பிணக்குகள், 'எல்லைகள் தாண்டிய குடிநீர் கொடுக்கல் வாங்கல்கள்' என்ற அகன்ற தலைப்பினை சென்ற மாதக் கருத்தரங்கின் பேசுபொருளாக எடுத்திருந்தோம். இந்திய தலைநகர் புதுடெல்லியின் இந்நாள் நீர் தேவைகளை நிரப்ப உடன்பட்டிருந்த டெல்லியின் எல்லைக்கு வெளியே உள்ள அண்டை மாநிலங்களான ஹரியானா, இமாச்சல பிரதேசம் இரண்டும் இன்று தண்ணீரை வழங்கமறுப்பதனால் ஏற்பட்டுள்ள முரண்பாட்டையும் நீர் பெறுதலில் ஏற்பட்ட நெருக்கடி நிலையையும் ஆராய்ந்தோம். அப் பெருநகரின் நீர் நெருக்கடி எமக்குப் புகட்டும் பாடங்கள் பற்றி விளக்கம் தரவென குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த நீர்ப் புவியமைப்பியல் அறிஞர் Dr யோகேஷ் ஜடேஜாவை அழைத்திருந்தோம்.

புராண காலங்கள் முதல் யமுனை நதியோடு நதியினது நீர்ப்பெருக்கு வெளியில் அமைந்து வரலாறு பல கண்ட இந்நகரம் பல்வேறு பாரம்பரிய வழிமுறைகள் மூலம் நீரைத் தேக்கியும் ஆழ்கிணறுகள் வழியாகவும் தனது நீர்த்தேவையை நிரப்பி வந்துள்ளது. எனினும் சுதந்திர இந்தியாவின் தலைநகராக இன்று 35 மில்லியன் மக்கள் தொகைக்கு ஏற்ற நீர்வளம் இன்றி தனது தேவைகளை அண்டை மாநில அரசுகளுடன் ஏற்படுத்திய ஒப்பந்தங்களின் அடிப்படையில் நிரப்பும் நிலையில், வெவ்வேறு அரச நீர்வழங்கல் அலகுகள் இடையேயும், மாநில மத்திய அரசுகளின் கட்சி அரசியல் பேதங்கள் காரணமாகவும் பிணக்குகள் கூடி சச்சரவு நீதிமன்று வரை சென்றுள்ளது இன்றைய யதார்த்தம். நீர் வளமோ அல்லது நீரைப் பெறும் மக்களோ அங்கு உரையாடலில் இல்லை என்கிறார் ஜடேஜா. பிணக்குச் சூழ்ந்த நிர்வாக அதிகாரங்கள் திட்டமிடும்போது அங்கு பாரம்பரிய அறிவையும் மக்கள் மனோநிலைகளையும் நீரியல் துறைசார் அறிவையும் உள்ளெடுப்பதைக் காணவில்லை என்கிறார்.

எமக்கான பாடங்கள்: முதல் நிலைக்கட்டுப்பாடாக உள்ளூர் நீர் வளத்தைச் சிதையாது பாதுகாத்துக் கொண்டு, மேலதிக நீருக்காக அயல் மாவட்டங்களை அணுகும் போதோ, அண்மையில் உள்ள ஊர்க் கிணற்றைப் பாவிக்கும் போதோ, மக்கள், மக்களோடு உள்ள விடயங்கள் அனைத்தையும் தாராளமாக மனம் திறந்து பேசி அறிவுசார் வகையில் ஒப்பந்தங்களை ஏற்படுத்துவது நன்று.

*எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 18 ஆம் திகதி துளியின் 6 ஆவது இதழ் உங்கள் கைகளை நாடி வரும். வடமாகாணத்து நீர் வளம் சார்ந்து உங்கள் கருத்துகளையும் கேள்விகளையும் அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:* **Water Security through Participatory Action Research (WASPAR) Project, Centre for Digital Epidemeology, Faculty of Medicine, University of Jaffna;** *மின்னஞ்சல்:* **water@univ.jfn.ac.lk**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரிஸ்: நாட்டின் புரட்சிக்கவி



O கோகுலராகவன்

ஜேம்ஸ் ஸ்ரீபன் (James Stephens ) அயர்லாந்துக் கவிஞர். அவர் சிறந்த எழுத்தாளராகவும் இருந்தார். அயர்லாந்தில் 1880 இல் பிறந்து இங்கிலாந்தில் 1930 இல் காலமானார். தன் இலக்கியப் பணியாக ஐரிஸ் நாடோடிக் கதைகளைத் தேடிப்பிடித்து புத்தகமாகப் பதிப்பித்தவர். இரண்டு வயதில் தந்தையை இழந்து தவித்தவருக்கு தாயாரின் மறுமணம் பேரிடியாக வந்து விழுந்தது.

தவித்து, தனித்துப் போனார். விடுதிப் பாடசாலை ஒன்றில் இணைக்கப்பட்டார். அவரது இளைமைக்காலம் அங்கேயே கழிந்தது.

தற்செயலாக இவரைவிட கொஞ்சம் அதிகமான ஒரு இளைஞன் இவரை தன் வீட்டுக்கு அழைத்துப் போய் வளர்ப்புச் சகோதரனாக வைத்துக்கொண்டான்.

அந்தக் குடும்பத்தோடு இவரது வாழ்க்கை முன்னேற்றகரமாக அமைந்தது. இதன் பின்னரே அவர் தன்னைக் கவிஞராக அடையாளப்படுத்திக் கொண்டார். ஐரிஸ் நாட்டின் விடுதலைக்காக அவர் பல புரட்சிகரமான கவிதைகளைப் படைக்கவும் தொடங்கினார். ஐரிஸ் மொழியில் எழுதிய ஜேம்ஸ் ஸ்ரீபன் அந்த மொழியில் புதுக் கவிதையின் முன்னோடியாகக் கருதப்படுகிறார்.

அதே நாட்டின் முக்கியமான எழுத்தாளரான ஜேம்ஸ் ஜோய்சியுடன் (James Joycee) ஒப்பிடக்கூடியவர். அத்தோடு ஜேம்ஸ் ஜோய்சியுடன் நெருங்கிய தொடர்பிலும் இருந்தவர்.

தானும் ஜோய்சியும் ஒரே நாளில் பிறந்தவர்கள் என்று ஜேம்ஸ் ஸ்ரீபன் குறிப்பிடுவதைக் காணமுடியும். இது அவருக்கு தனது பிறந்த திகதி தெரியாத காரணமாகவும் இருக்கலாம்.

நாலு அடி பத்து அங்குல உயரத்தில் இருந்த ஜேம்ஸ் ஸ்ரீபன் இராணுவத்திலும் கடமைபுரிந்தார். அவரது பொறி (snare) என்ற கவிதையை இங்கு தமிழில் தருகிறேன்.



## இருந்து கதைப்பம்

## பொறி

திடீரென்று எங்கிருந்தோ ஒரு
மரண ஓலம் கேட்கின்றது
ஒரு வெண்முயல் எங்கோ
பொறியில் அகப்பட்டுவிட்டது
மீண்டும் அது அழுகின்றது
எங்கிருந்து என்பது தெரியவில்லை

எங்கிருந்து என்பது தெரியவில்லை
அது உதவிக்காக அழைக்கின்றது
மிகவும் பயந்து அலறுகின்றது
சூழலையே பயமுறுத்துகிறது
அதனது அலறல்

சூழலையே பயமுறுத்துகிறது
அதனது அலறல்
அதன் சிறிய முகம் மேலும்
சுருங்கிப் போகிறது
மீண்டும் உதவிக்காக அதன் ஓலம்

எங்கிருந்து என்பது தெரியவில்லை
அதன் பாதம் பொறியில் எங்கு
பட்டதோ?
ஓ... மிகச்சிறியது ஓ... மிகச் சிறியது
நான் எங்கும் சுற்றி அதை
தேடுகின்றேன்

ஆங்கிலமூலம்:
ஜேம்ஸ் ஸ்ரீபன்ஸ்
தமிழில்: கோகுலராகவன்

# அர்ச்சுனாவும்

எனினும்,அவர் சார்ந்த சிஸ்டத்தின் மீது அவர் எழுப்பியிருக்கும் கேள்விகள் விசாரணைக்குரியவை. திணைக்களம் சார்ந்த உள்ளக விசாரணைகள் உண்மைகளை வெளியே கொண்டு வரலாம்.அல்லது ஊடகத் துறையைச் சேர்ந்தவர்கள் அதை மணந்து கண்டுபிடிக்கலாம்.அர்ச்சுனா எழுப்பிய கேள்விகள் தொடர்பாக உண்மைகளை புலனாய்ந்து வெளியே கொண்டுவர வேண்டிய துறைசார் பொறுப்பு ஊடகங்களுக்கு உண்டு.அது ஊடகத் துறை சார்ந்த பொறுப்புக் கூறல்.

அதேசமயம் துறைசார் அரச உயர் அதிகாரிகள் அவர் எழுப்பிய கேள்விகள் தொடர்பாக மக்களுக்கு பதில் கூற வேண்டும். அதைவிட முக்கியமாக அர்ச்சுனா ஒரு பொறியைத் தட்டிப்போட்டதும் அது எப்படி சாவகச்சேரியில் தீயாகப் பரவியது என்பதற்குரிய சமூக உளவியலையும் தொகுத்து ஆய்வுசெய்ய வேண்டும். அர்ச்சுனாவின் கலகம் வெற்றிடத்தில் இருந்து தோன்றவில்லை. அது ஏற்கனவே சமூக மட்டத்தில் பரவலாகக் காணப்பட்ட அதிருப்தி, கோபம், பயம், சந்தேகம் போன்றவற்றின் தொகுக்கப்பட்ட விளைவுதான். ஏற்கனவே பொதுப் புத்திக்குள் இருந்த பயங்களையும் கோபத்தையும் அதிருப்தியையும் அர்ச்சுனா ஒருங்குவித்தார் என்பதுதான் சரி.

அர்ச்சுனாவின் விமர்சனங்கள் விவகாரம் ஆகிய பின் சில நாட்கள் கழித்து யாழ்.போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் சத்தியமூர்த்தி ஒரு குறிப்பை முகநூலில் போட்டார். அது போதனா வைத்தியசாலை மீதான விமர்சனங்களுக்குப் பதில் கூறும் நோக்கிலானது. ஆனால் அதற்கு கீழே வந்த கருத்துகளைத் தொகுத்துப் பார்த்தால், 500க்கும் அதிகமான கருத்துகளில் 90 விகிதத்துக்கும் அதிகமானவை மருத்துவத் துறைக்கு எதிராக கடுமையான விமர்சனங்களை முன்வைப்பவை.அதில் ஒரு செய்தியுண்டு.பொதுசன மனோநிலை ஏன் அவ்வாறு அதிருப்தியோடும் கோபத்தோடும் காணப்படுகின்றது?

ஒரு சமூகத்தின் குறிப்பிட்ட ஒரு துறைசார்ந்த பொறுப்புக்கூறல் தொடர்பில் விழிப்பு அதிகரிப்பது நல்லது.ஒவ்வொருவரும் தொழில் சார்ந்தும் அறம் சார்ந்தும் குறைந்தது மனச்சாட்சிக்காவது பொறுப்புக்கூற வேண்டும்.ஒரு மருத்துவர் கூறியதுபோல,பொது மருத்துவமனைகளில் கழிப்பறைகளை பயன்படுத்துவதிலும் பொதுச்சொத்தை நுகர்வதிலும் பொதுமக்கள் எவ்வளவு தூரம் பொறுப்போடு காணப்படுகிறார்கள்?எல்லாப் பொது மருத்துவமனைகளிலும் கழிப்பறைகள் மோசமாகக் காணப்படுகின்றன.ஏன் அதிகம் போவான்? முறிகண்டியில் கழிப்பறைக்குக் காசு வாங்கப்படுகின்றது. ஆனால் அந்தக் கழிப்பறையின் சுகாதாரச்சூழல் எப்படியிருக்கிறது? மேற்கத்திய சமூகத்தின் சமூகப் பொறுப்பை கண்டுபிடிக்கக் கூடிய இடங்களில் ஒன்று கழிப்பறைகள் ஆகும். அங்கே பொதுக் கழிப்பறைகள் சுத்தமாக இருக்கும்.அது நலன்புரி அரசுக் கட்டமைப்பு.தவிர அங்கே கழிப்பறைகள் உலர்ந்தவை.ஆனால் நமது கழிப்பறைகளோ ஈரமானவை.எனவே எமது சூழலுக்கு ஏற்ப வித்தியாசமாகச் சிந்தித்து கழிப்பறைகளில் சுத்தத்தைப் பேண வேண்டும். ஆனால் பொதுக் கழிப்பறைகளை வைத்து ஒரு சமூகத்தின் பொறுப்புணர்ச்சியை மதிப்பிடலாம்.எனவே பொறுப்புக்கூறல் எல்லாத் தளங்களிலும் உறுதி செய்யப்பட வேண்டும்.பொது மக்களில் தொடங்கி அரசாங்கம் வரை அனைவரும் பொறுப்புக்கூற வேண்டும்.

ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை பொறுப்புக்கூறல் என்ற வார்த்தைக்கு அதிகம் பிரயோக அழுத்தம் உண்டு. அரசியல் அடர்த்தி உண்டு.2015 ஆம் ஆண்டு ஐ.நா.வில் நிறைவேற்றப்பட்ட30/1 தீர்மானம் பொறுப்புக் கூறலுக்கானது. அதாவது நிலைமாறு கால நீதிக்கு உரியது. ஆனால் அது தோற்கடிக்கப்பட்டது. இனப்படுகொலைக்கு யாருமே இதுவரை பொறுப்புக் கூறவில்லை.இவ்வாறு அரசியல் அர்த்தத்தில் பொறுப்புக் கூறப்படாத ஒரு நாட்டுக்குள்,அல்லது பொறுப்புக் கூற யாருமற்ற ஒரு நாட்டுக்குள், பொறுப்பு கூறலை சர்வதேச நீதிமன்றத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்று கேட்கும் ஒரு சிறிய மக்கள் கூட்டம், தனக்குள்ளும் அந்தந்தத் துறை சார்ந்து அல்லது ஆகக்குறைந்தது அவரவர் தமது மனச்சாட்சிக்காவது பொறுப்புக் கூறத்தானே வேண்டும்?

# பாகம் 2



# ஊர்ப்புதினம்

O இராகவன்

நான் ஊர்ப்புதினத்தில ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிற அந்தப் பிரசங்கியர் தல்லையப்புலம் பத்திரகாளி கோயில்ல பிரசங்கம் செய்யேக்குள்ள பத்திரகாளியைப்பற்றி ஒரு துதிப்பாடல் இயற்றிப் பாடினவர். அதிலை "தல்லையப்பலம் வாழும் பத்திரகாளியம்மா!" எண்டொரு வரி வரும் . அதை என்னோட சிவனும் கேட்டுக்கொண்டிருந்தவன். பிறகு நைஸா என்னைச்சுரண்டி "என்னடா உவர் தல்லையப்பலம் வாழும் ...." எண்டு பாடுறார் எண்டான். எனக்கு சாடையாச் சிரிப்பு வந்திட்டு. "சிரிப்புக்காட்டிப் பகிடிவிடாமல் கொஞ்ச நேரம் சும்மாயிரடா " எண்டு சொன்னன். அவனைப்பற்றித் தெரியுந்தானே? முட்டையில மயிர்பிடுங்கிற விண்ணன்.

அடுத்தநாள் ஊர்ப்பொடியளோட சேந்து "தல்லையப்புலம் வாழும் பத்திரகாளியம்மா!" எண்டு பாடிக்கொண்டு திரிஞ்சான். பிறகென்ன ஒரே முசுப்பாத்திதான். இப்ப நான் இதை எழுதிக் கொண்டிருக்கேக்குள்ள தல்லையப்புலம் பத்திரகாளிக்கு திருவிழா நடந்து கொண்டிருக்கு. ஆனால் முந்தின மாதிரி பெரிசா எழுப்பமில்ல. கலை நிகழ்ச்சியெண்டு ஒண்டுமில்லை. தனியச் சுவாமி சுத்துறது மட்டுந்தான். ஆனால் கோபுரங்கீபுரமெல்லாம் லைற் பூட்டி வலுவிலாசங் காட்டினம். நாகங்குடை பிடிக்கிற அம்மன்ர திருவுருவொன்றும் லைற்பூட்டிக் கொழுவியிருக்கினம். காலமை நாலரை அஞ்சுக்கு லவுட்ஸ்பீக்கர் போட்டினமெண்டால் இரவு பத்துப்பதினொரு மணிக்குத்தான் ஓயும். இதையெல்லாம் அடிப்படையா வைச்சுத்தான் அண்மையில காலமான எங்கட பேராசிரியர் செ.யோகராசா (கருணை யோகன்) "கோயில்லா ஊரில் குடியிருக்க வேண்டும்" எண்டு சொல்லியிருக்கிறார்.

அதுக்க இந்தத்திருவிழாவுக்கு வெளிநாட்டாக்கள் முழுக்க வந்து குவிஞ்சிருக்கினம். இதையெல்லாம் பாத்திட்டு உவர் கோகுலராகவண்ணை இருந்து கதைப்பமில இடைக்கிடைகொண்டு வாற 'நாகராசா மாமா' மாதிரியொராள் எங்கட ஊரில இருக்கிறார். அவரின்ரைபெயரை என்னத்துக்கு? அந்தாள் என்னசொல்லுதெண்டால் "எங்கடை பத்திரகாளிக்கு இனித் தல்லையப்புலம் வீரபத்திரகாளி எண்ட பெயர் பொருந்தாதாடா தம்பி! இனி அவக்கு வெளிநாட்டுப் பத்திரகாளி எண்ட பெயர் தான் பொருத்தமடா தம்பி!" அதைக்கேட்டு நான் ஒண்டும் சொல்லேல்ல. கொடுப்புக்குள்ள சிரிச்சுப்போட்டு விட்டுட்டன். எனக்கேன் வீண்சோலி? ம்... விசயத்துக்கு வருவம்.

49

தல்லையப்புலம் பத்திரகாளி கோயில பற்றின என்ர அனுபவத்தையெல்லாம் முடிஞ்சளவுக்கு சொல்லியிருக்கிறன். எங்கட அம்மாவின்ர தகப்பன் அதுதான் என்ர தாத்தா , தில்லையம்பலம் எண்டது அவரின்ர பெயர். அவர் அம்பாந்தோட்டையில படிச்சவர் அவரைத் தில்லையம்பல வாத்தியார் எண்டு தான் ஊராக்கள் கூப்பிடுவினம் அவர் இஞ்சை பூதராகோயில் பள்ளிக்கூடத்திலயும் படிப்பிச்சவர். பள்ளிக்குப் போகாம ஒளிக்கிற பொடியளையெல்லாம் வீடு வீடாப்போய்க் கூட்டிக்கொண்டு போறவராம். கொப்பி,புத்தகம் வாங்க வசதியில்லாத பொடியளுக்கெல்லாம் தன்ர காசில வாங்கிக்குடுக்கிறவராம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org